# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு IV

பகுதி 2

**Kerala Reader - Tamil**
**Standard IV**
**Part - 2**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

தமிழ்

4

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

பிற உயிரினங்களிடமிருந்து மனித இனத்தைத் தனிமைப்படுத்துவதும் பெருமைப்படுத்துவதும் மொழியே. கருத்துப் பரிமாற்றத்திற்குப் பெரிதும் துணைபுரியும் மொழி இல்லையேல் விலங்கினத்தின் இன்னொரு பிரிவாகவே மனித இனமும் இருந்திருக்கும். பிற உயிரினங்களின் வாழ்க்கைமுறை முன்பிருந்தபடி அப்படியே நூற்றாண்டுகளைத் தாண்டியும் நிலை பெறுகிறது. ஆனால் காலந்தோறும் வாழ்வியலில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படும் இனம் மனித இனம் மட்டுமே. விலங்கின வாழ்க்கைக்கு நிகரான ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த மனித இனம் நாகரிக, பண்பாட்டு வளர்ச்சியினால் இன்று எவ்வளவோ மாறிவிட்டது. அறிவியலில் புரட்சிகரமான ஒரு வளர்ச்சியை அடைந்துள்ளோம். இவற்றிற்கெல்லாம் அடித்தளமாக இருப்பது மொழியே என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

மொழியை ஒரு மொழியாக மட்டும் கற்காமல், அந்த மொழியின் வாயிலாக நம்மையும் நாம் வாழும் சமூகத்தையும் சுற்றுப்புறத்தையும் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு கற்க வேண்டும் என்பதே நமது அடிப்படை நோக்கம். அதன் அடிப்படையில் எளிமையும் இனிமையும் கலந்த மொழிநடையில் பொருத்தமான கருத்துகளுடன் இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கற்றல் என்பது சோர்வை ஏற்படுத்தாமல் ஆர்வத்தைத் தூண்டுமாறு அமையவேண்டும். இனிமையாக இருக்க வேண்டும்.

வாழ்த்துகள்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - IV (Part 2)

**Advisor**

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

**Chairperson**

**Dr. Helen Japa Rose, S.L.**
Associate Professor in Tamil, Govt. College, Munnar, Idukki

**Experts**

**Dr. N. Neelamohan.**
Principal (Rtd.), Vivekananda College, Agestheswaram, Kanyakumari.

**Dr. Ayyappan, N.**
Associate Prof. of Tamil, S.T. Hindu College, Nagercoil.

**Members**

**Anishkumar, A.**, LPST, MAILPS, Murukady, Kumily, Idukki.
**Arockiadhas, R.**, PD Teacher, GTHS Mattathukad, Palakkad.
**Eswaran, T.**, LPST, ALPS, Luckham, Munnar, Idukki.
**Manivannan, C.**, PD Teacher (Rtd.), Govt. Tamil LPS Chalai, Thiruvananthapuram.
**Mohamed, D.**, PD Teacher, GUPS RB Kudam, Palakkad.
**Nagendren, S.**, HM, Govt. UPS, Kallar, Munnar, Idukki.
**Sandra Raj, T.**, LPST, Govt. Fort UPS, Manacaud, Thiruvananthapuram.
**Shirly, E.**, PD Teacher, Govt. LPS Ayinkamam, Parassala, Thiruvananthapuram.
**Velankanni, I.**, PD Teacher, Govt. UPS Kannimalay, Munnar, Idukki.

**Academic Co-Ordinator**

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 5 | நல்வாழ்வு | |
| | நல்ல உணவுகள் | 96 - 102 |
| | சுத்தம் | 103 - 107 |
| | விளையாட்டு | 108 - 114 |
| அலகு 6 | விருந்தோம்பல் | |
| | தானம் | 116 - 121 |
| | மாமலை நாடு | 122 - 126 |
| | அரசு | 127 - 130 |
| அலகு 7 | தொழில்கள் | |
| | குடிசைத்தொழில் | 132 - 137 |
| | புஞ்சை | 138 - 142 |
| | வண்ண வண்ணபூக்கள் | 143 - 148 |
| அலகு 8 | நிலமும் நீரும் | |
| | தென்றல் | 150 - 154 |
| | நிலமகள் | 155 - 160 |
| | நெய்தல் | 161 - 165 |
| | அகரமுதலி | 166 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 5

# நல்வாழ்வு



நம் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க நல்ல உணவுகள், தனிநபர் சுத்தம், விளையாட்டு போன்றவை தேவையாகும். ஆரோக்கியமான உடலிலே ஆரோக்கியமான மனம் இருக்கும் என முன்னோர் கூறியுள்ளனர்.

# நல்ல உணவுகள்



## உணவு முறை

நடந்து போகத் துன்பமும்
எழுந்து நிற்கச் சிரமமும்
உடல் பருத்துப் போவதால்
உம்மை வந்து வாட்டுமே

உடற் பயிற்சி செய்யவும்
ஓடி யாடித் திரியவும்
இடர்ப்ப டுத்தும் நம்முடல்
இரண்டு பங்கு எடையினால்!

நன்று ஒன்று சொல்லுவேன்!
நன்மை யடைய விரும்பினால்,
பசித்த பின்பு மட்டுமே
புசிக்க வேண்டும் உணவினை!

அரை வயிறு அன்னமும்
கால் வயிறு தண்ணியும்
மீத முள்ள இடத்தையே
மீதி வைக்க வேண்டுமே!

மூன்று வேளை உண்ணுவோம்!
முயன்று வேலை பண்ணுவோம்!
உண்ட உணவு செரித்தபின்
உணவுப் பக்கம் செல்லுவோம்!

– வளர்கவி

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- கவிதையில் நாம் எப்படி உணவு உண்ண வேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார்? சொல்லுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - பருத்து : ........................................
  - இடர் : ........................................
  - புசிக்க : ........................................
  - சிரமம் : ........................................
- மாதிரியைப் போன்று எழுதுங்கள்.
  (எ.கா) புட்டு – பூட்டு
  - தடை – ..................................
  - குடை – ..................................
  - முட்டை – ..................................
  - வடை – ..................................
  - பசி – ..................................
- பாடலை வாசித்துப் பிடித்த வரிகளைக் கூறுங்கள்/ எழுதுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த தானிய வகைகளின் பெயர்களை எழுதுங்கள்.
- கவிதையை நிறைவு செய்யுங்கள்.

சோளம் குத்திச் சோறாக்கி
சொட்டும் மோரில் கூழாக்கி
காலை, மாலை அருந்துவது
பசியைப் போக்க உதவிடுமே
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

## தேன்

தேன் என்பது பல வகையான தேனீக்களால் தயாரிக்கப்படும் ஓர் இனிப்பு மற்றும் பிசுபிசுப்பான பொருள் ஆகும். நமது உடலுக்குத் தேவையான சர்க்கரை, இயற்கையாகக் கிடைக்கும் தேனில் நிறைய உள்ளது. அது இரத்தத்துடன் எளிதில் கலந்து சக்தியைத் தருவதுடன் உடலின் வெப்பத்தையும் சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது. தேனில் பலவகைப்பட்ட வைட்டமின்களும் தாதுக்களும் நிறைந்துள்ளன. அதனால் நமது உடலில் வளர்ச்சி மாற்றத்திற்குத் தேன் பயன்படுகிறது. தேனை அளவோடுதான் உண்ண வேண்டும். குழந்தைகள் இருபது கிராமும் பெரியவர்கள் நாற்பது கிராமும் உட்கொள்ளலாம். நாம் சுத்தமான தேனைக் கண்டறிந்து பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.



தேனில் விழுந்த ஈ சிறிது நேரத்தில் பறந்து சென்றாலோ; தண்ணீரில் ஒரு சொட்டுத் தேனை விடும் போது அது எங்கும் பரவாமல் நேரே கீழிறங்கினாலோ அது நல்ல தேன். இவ்வாறு நல்ல தேனைக் கண்டறிய முடியும்.

தேள் கொட்டிய இடத்திலும் பூச்சி கடித்த இடத்திலும் தேனைத் தடவினால் அதன் கடுகடுப்புச் சற்றுக் குறையும். அது போலவே இருதயம் பலவீனம் உள்ளவர்கள், நீரிழிவு நோய் உள்ளவர்கள், ஆஸ்துமா நோயாளிகள் போன்றோர் சர்க்கரைக்குப் பதிலாகத் தேனைப் பயன்படுத்துவது நல்லது. இருமல், புண்கள், பருக்கள் மற்றும் பலதரப்பட்ட காயங்களைக் குணப்படுத்தவும் தேன் பயன்படுகிறது. ஒரு டீஸ்பூன் தேனைத் தொண்டையில் விட்டு மெதுவாக இறக்கினால் தொண்டைப்புண்

குணமடையும். பகலில் சோர்வாக இருக்கும் நேரத்தில் வெந்நீரில் தேனைக் கலந்து குடித்தால் சோர்வு மாறி மூளை சுறுசுறுப்பாகி உற்சாகம் அடையும். ஆகவே நம் முன்னோர்கள் தேனை மூவா மருந்தென்றும் சாவா மருந்தென்றும் போற்றிப் பெருமைப்பட்டனர்.

– முத்து வேலு

## செயல்பாடுகள்

- பாடப் பகுதியை வாசித்துத் தேனின் நன்மைகளைக் கலந்துரையாடிக் கூறுங்கள்.
- இருசொல் ஆக்குங்கள்.
  - தேனீக்கள் = ..................... + .....................
  - கண்டறிந்து = ..................... + .....................
  - நீரிழிவு = ..................... + .....................
  - தொண்டைப்புண் = ..................... + .....................
- தேன் என்னென்ன நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகிறது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.
- தேனில் கலப்படம் இருப்பதை எவ்வாறு கண்டறியலாம் என்பதை எழுதுங்கள்.
- தேனின் நன்மைகள் பற்றிச் சிறு குறிப்பு எழுதுங்கள்.

## நேர்காணல்

(பள்ளி சுகாதார மன்றம் சார்பாக வட்டவடை ஆரம்பப் பள்ளி மாணவ மாணவியராகிய அசோக், கந்தன், மினி, மாலினி, தமிழினி ஆகியோர் அங்குள்ள ஆரம்ப சுகாதார மையம் சென்று மருத்துவர் சுரேஷ் அவர்களிடம் தங்கள் சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்டனர்.)

மாணவர் : டாக்டர் ஐயாவுக்கு வணக்கம்.

மருத்துவர் : வாங்க வாங்க குழந்தைகளே! என்ன விசேஷமாக வந்தீங்க!

மாணவர் : ஐயா! சுகாதாரம் தொடர்பான ஒரு சில கேள்விகள் கேட்கலாம் என வந்துள்ளோம்.

மருத்துவர் : சரி, கேளுங்க குழந்தைகளே!

அசோக் : ஐயா! நான் ஒல்லியாக இருக்கிறேன். உடல் நல்ல முறையில் இருக்க என்ன செய்ய வேண்டும்?

மருத்துவர் : பால், முட்டை, மீன், இறைச்சி போன்ற புரதச்சத்து மிகுந்த உணவுகளை எடுத்துக் கொண்டால் உடல் வலுவாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

கந்தன் : ஐயா! விலை உயர்ந்த உணவுகள் சத்தானதா?

மருத்துவர் : இல்லை. நமது வீட்டில், சுற்றுப்புறத்தில் உள்ள பப்பாளி, கொய்யாப்பழம், வாழைப்பழம், கீரை வகைகள் இவற்றில் கூடுதல் சத்துகள் உள்ளன.

மினி : ஐயா! எனக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்படுகிறது என்ன காரணம்?

மருத்துவர் : பாப்பா நீ என்ன வகையான உணவுகளை எடுத்துக் கொள்கிறாய்?

மினி : ஐயா! நான் பிரியாணி, பர்கர் மற்றும் பிசா போன்ற உணவுகளை அடிக்கடி சாப்பிடுகிறேன்.

மருத்துவர் : அத்தகைய துரித உணவுகளைத் தவிர்க்க வேண்டும். பழங்கள், காய்கறிகள், தானியங்கள் போன்றவற்றை அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் அதிகமாகக் குடிக்க வேண்டும்.

மாலினி : ஐயா! எனக்கு அடிக்கடி கண் எரிச்சல் உண்டாகிறது.

மருத்துவர் : கைப்பேசி அடிக்கடி பயன்படுத்துகிறாயா?



| | | |
|---|---|---|
| மாலினி | : | ஆமாய்யா எனக்கு கைப்பேசியில் விளையாடுவது ரொம்பப் பிடிக்கும். |
| மருத்துவர் | : | கைப்பேசியை அதிகமாகப் பயன்படுத்தினால் கண் பார்வை மங்கி விடும். ஆகவே கைப்பேசியைப் பயன்படுத்தும் நேரத்தைக் குறைக்க வேண்டும். காரட், கீரை வகைகளை அதிகமாகச் சாப்பிட வேண்டும். |
| மினி | : | ஐயா! எனக்கு அடிக்கடி சளித் தொல்லை ஏற்படுகிறது. |
| மருத்துவர் | : | அப்படியா? தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து, ஆற வைத்துக் குடிக்க வேண்டும். |
| தமிழினி | : | எனக்கு ஒரு சந்தேகம். அடிக்கடி பல்வலி வருகிறது. அதற்கு என்ன காரணம் ஐயா? |
| மருத்துவர் | : | தினந்தோறும் இரண்டு வேளை பல் துலக்கித் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். |
| தமிழினி | : | ஆ... இரண்டு வேளை பல் துலக்கினால் மட்டும் போதுமா? |
| மருத்துவர் | : | இல்லை, கால்சியம் நிரம்பிய உணவுப் பொருட்களை அதிகம் பயன்படுத்த வேண்டும். இனிப்பு வகைகளை அதிகமாகச் சாப்பிடக் கூடாது. |
| கந்தன் | : | ஐயா! நோய்கள் உண்டாகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? |
| மருத்துவர் | : | நல்ல ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிட்டு நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். மாலையில் விளையாட வேண்டும். |
| அசோக் | : | ஐயா! நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பொறுமையாகப் பதில் சொன்னீங்க. நன்றி ஐயா. |
| மருத்துவர் | : | நல்லது. ஆனால் ஒரு காது வழியாகக் கேட்டதை இன்னொரு காது வழியாக விட்டுவிடாதீர்கள். நான் கூறியதைப் பின்பற்றுங்கள். |
| மாணவர்கள் | : | சரிங்க ஐயா. |

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கலந்துரையாடுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - அடிக்கடி – ........................................................................
  - தொல்லை – ........................................................................
  - தூய்மை – ........................................................................
  - கைப்பேசி – ........................................................................
  - ஆரோக்கியம் – ........................................................................
- புதிரில் உள்ள சொல்லைக் கண்டுபிடியுங்கள்.
  - பசு என்ற சொல்லின் இறுதி எழுத்து.
  - பத்து என்ற சொல்லின் இடை எழுத்து.
  - வந்தது என்ற சொல்லின் மூன்றாவது எழுத்து.
  - வரும் என்ற சொல்லின் இறுதி எழுத்து.
  - சொல் எது? ............................................................

  இதுபோன்ற புதிர் வினாக்கள் கண்டுபிடித்து வகுப்பறையில் போட்டி நடத்துங்கள்.
- கால்சியம் அடங்கிய உணவுப் பொருட்கள் எவை? தகவல் சேகரித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- உங்களது பள்ளியில் சுகாதாரமன்றம் சார்பாக நடத்தப்படும் "இயற்கை உணவின் நன்மைகள்" குறித்துப் பேச வரும் மருத்துவரிடம் நேர்காணல் நடத்துவதற்கு ஒரு வினாநிரல் தயார் செய்யுங்கள்.
- மருத்துவத்துடன் தொடர்புடைய தகவல்கள் ஜோடிகளாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சரியானது எது?
  - மருத்துவர் : நோயாளி
  - மருத்துவமனை : போலீஸ்
  - மருத்துவமனை : நர்ஸ்

  A. 1 உம் 3 உம் சரி

  B. 2 உம் 3 உம் சரி

  C. 1 உம் 2 உம் 3 உம் சரி

  D. 1 உம் 2 உம் சரி



# சுத்தம்



## தூய்மை வழியே சென்றிடு!

அடடா தம்பி அன்பழகா,
"ஆமாம்! பள்ளிக்குப் போகலையா?
தடமே காட்டும் கோயிலடா
தாமதம் அதிலே காட்டாதே!"

விடியும் காலைப் பொழுதினிலே
விழித்தே எழுவாய் தினந்தோறும்;
படியும் நன்றே அதிகாலைப்
படிக்கும் பாடம் மனதினிலே!

பல்லைத் துலக்கு பளிச்சென்று
பாது காப்பு நமக்குண்டு!
நல்லது குளிர்ந்த நீராடல்
நாளும் தூய்மை காத்திடுவாய்!

வகுப்பில் சொல்லும் பாடத்தில்
வைத்தே கவனம் கேட்டிடுவாய்!
கொடுக்கும் வீட்டுப் பாடத்தைக்
குணமாய்க் கற்று ஆர்த்திடுவாய்!

நட்பாய்ப் பழகி யாரிடமும்
நன்மை செய்யக் கூடிடுவாய்!
நுட்பம் அறிந்து கல்வியிலே
நாளும் கற்றே தேர்ந்திடுவாய்!

நாட்டை ஆளும் நல்லவராய்
நாளை உலகின் வல்லவராய்;
தீட்டும் அறிவால் வென்றிடுவாய்
தூய்மை வழியே சென்றிடுவாய்!

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- கவிதையில் உங்களுக்குப் பிடித்த வரிகளைக் கூறுங்கள். காரணத்தை எழுதுங்கள்.
- இரண்டாம் எழுத்து ஒரே போல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- கவிதையில் தூய்மையாகயிருக்க ஆசிரியர் என்னென்ன கூறியுள்ளார்? எழுதுங்கள்.
- பொருத்தமான கூற்றிற்கு சரி (✓) தவறு (×) அடையாளப்படுத்துங்கள்.
    - தினமும் குளிக்க வேண்டும்.
    - இரவில் பல் துலக்கக்கூடாது.
    - சுத்தமான ஆடைகளை அணியக் கூடாது.
    - சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் கை கழுவ வேண்டும்.
    - நகத்தை வளர்க்க வேண்டும்.
- தூய்மையாக இருக்க நீங்கள் என்னென்ன செய்வீர்கள்? எழுதுங்கள்.

## சாந்தமுள்ள சாந்தி

சாந்தி மிகவும் சாந்தமானவள். பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடப்பவள். அவள் உடுத்தும் ஆடைகளில் அழுக்குப் படியாமல் பத்திரமாகப் பார்த்துக் கொள்வாள்.



குப்பைகளைக் கண்ட இடத்தில் வீசி எறிய மாட்டாள். சாக்லேட், வாழைப்பழம் எது சாப்பிட்டாலும் நின்ற இடத்திலேயே போடாமல், ஒரு காகிதத்தில் சுற்றிவைத்து குப்பைத் தொட்டியில் போடுவாள்.

இதனால் அவள் பெற்றோருக்கு, சாந்தியைப் பற்றிய கவலையே இல்லை. "இதைச் செய்யாதே! அதைச் செய்யாதே!" என்று சொல்லவேண்டிய அவசியமும் இல்லை.



ஒரு நாள் சாந்தி, அவளது தோழி வீட்டிற்குச் சென்றாள். அவளது தோழி வீட்டார் சாந்திக்கு, ஏராளமான இனிப்பு வகைகளையும், பழ வகைகளையும் கொடுத்தனர்.

சாந்தியும் அவளது தோழியும் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சாந்தியின் தோழி லதா, எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டுக் குப்பைகளை அப்படியே விட்டுச் சென்றாள்.

அதைப் பார்த்த சாந்தி, பொறுமையாக எல்லாக் குப்பைகளையும் பொறுக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டு வந்தாள். இதைப் பார்த்த லதாவுக்கு தனது செயல் வெட்கத்தை ஏற்படுத்தியது.

"சாரிடி சாந்தி! இனிமே நானும் உன்னைப் போல சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வேன்" என்று கூறியதைக் கேட்க சாந்திக்குப் பரிதாபமாக இருந்தது. அப்படியே லதாவைக் கட்டித் தழுவிக் கொண்டாள். இருவரும் சிரித்தனர்.

– இறைநம்பி

## செயல்பாடுகள்

- கதையை வாசியுங்கள். மையக் கருத்தைக் கூறுங்கள்.
- கதையை வாசித்து உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரத்தைக் கூறுங்கள். காரணத்தைச் சொல்லுங்கள்.
- நமது சுற்றுப்புறத்தையும் பள்ளிக்கூடத்தையும் சுத்தமாக வைப்பதற்கு, நமது பள்ளியில் வைப்பதற்காக முத்திரை வாக்கியம் எழுதுங்கள்.
- கதையை வாசித்து உரைநடை வடிவில் எழுதுங்கள்.
- பள்ளியையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைக்க நீங்கள் என்னென்ன செய்வீர்கள்? குறிப்பு எழுதுங்கள்.
- நா பிறழ் பயிற்சி (வேகமாக வாசியுங்கள்).

ஏழைக் கிழவன்<br>வாழைப்பழத் தோல் வழுக்கி<br>வழு வழுக்கிக் கீழே விழுந்தான்.

## சுத்தம்

'சுத்தம் சோறு போடும்' என நமது முன்னோர்கள் சொல்லிச் சென்றுள்ளார்கள். அப்படிப்பட்ட சுத்தத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.



முதலில் பற்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட பிறகு பல் துலக்க வேண்டும். முக்கியமாக இனிப்புப் பொருட்களைச் சாப்பிட்டதும் வாய் கொப்பளிக்க வேண்டும். நகத்தை வெட்டி, விரல்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் கைகளைக் கழுவ வேண்டும். மலம் கழித்த பிறகு கைகளைச் சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். கால்களின் மேற்புறம் மற்றும் உட்புறங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

வெளியில் செல்லும்பொழுது காலணிகள் அணிய வேண்டும். திறந்த வெளியில் மலம், சிறுநீர் கழிக்காமல், சுகாதாரக் கழிவறையைப் பயன்படுத்த வேண்டும். குளிர்ந்த நீரில் கண்களைக் கழுவ வேண்டும்.



பழங்களைச் சாப்பிடுவதற்கு முன்பு நன்றாகக் கழுவி சுத்தம் செய்த பிறகு சாப்பிட வேண்டும். அசுத்தமான, தூசி படிந்த, ஈ மொய்த்த பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. நாம் நமது உடலையும், தலை முடியையும்



மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதற்காக நாம் தினமும் குளிக்க வேண்டும். தலை முடியை அழுக்கில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் எனத் தனிச் சோப்பு, சீப்பு, தலை துவட்டும் துண்டு தனித்தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் பயன்படுத்தியதை இன்னொருவர் பயன்படுத்தக் கூடாது.

நாம் அணியும் ஆடைகளை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் பயன்படுத்திய ஆடையை மற்றவர்கள் பயன்படுத்தல் கூடாது. துணிகளைத் துவைத்துச் சூரிய ஒளி படுமாறு வெயிலில் உலர வைக்க வேண்டும். உண்பதும் உறங்குவதும் வேலை பார்ப்பதும் மட்டும் தான் நமது கடமை அல்ல. நமது உணவு, உறக்கம், உடை, வேலை அனைத்திலும் சுத்தம் வேண்டும்.

– அருணா

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்து மையக்கருத்தைக் கூறுங்கள்.
- நம் உடலை எவ்வாறு பேண வேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார். எழுதுங்கள்.
- சரியான பொருளை இணையுங்கள்.
  - முன்னோர் – கிழிந்த ஆடை
  - கந்தை – பின்பற்றுதல்
  - நீக்குதல் – சுகம்
  - நலம் – அகற்றுதல்
  - கடைப்பிடித்தல் – மூதாதையர்
- சுத்தம் கடைப்பிடிக்க நீங்கள் தினசரி செய்யும் செயல்களைக் குறிப்பாக எழுதுங்கள்.
- சுத்தம் தொடர்பான பழமொழிகளைச் சேகரித்து ஒரு மலராக வெளியிடுங்கள்.
- உங்கள் பள்ளி சுகாதார மன்றத் திறப்பு விழாவிற்கான அழைப்பிதழ் தயாரியுங்கள்.



# விளையாட்டு



## பந்து

உதைத் துதைத்துத் தள்ளியே
ஓடித் தொடர்ந்து செல்லுவார்
பதைப் பதைத்தே எதிரிகள்
பாய்ந்து வந்து மறித்துமே

உதைத்த பந்து வானிலே
உயரக் கிளம்பி மீண்டுமே
குதித்து வந்த பக்கமே
"கோலை" நோக்கி ஓடுமாம்!

கோலைக் காத்து நிற்பவன்
குறுக்கில் ஓடிப் பிடித்ததைக்
காலால் எற்றித் தள்ளுவான்
காற்றாய்ப் பறந்து போகுமே!

ஓல மிட்டுக் கூவியே
ஓடிப் பந்தை எதிரியின்
கோலுக் குள்ளே தள்ளினால்
கொள்ள லாகும் வெற்றியே!

–நாரா. நாச்சியப்பன்

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த விளையாட்டுகளின் பெயர்களைப் பட்டியலிடுங்கள். எழுதுங்கள்.
- ஏதாவது ஒரு விளையாட்டின் விதிமுறைகளைப் பற்றித் தகவல் சேகரித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- கவிதையை முழுமையாக்குங்கள். கவிதைக்குத் தலைப்பு கொடுங்கள்.

  பந்து ஆடி மகிழலாம்

  பறந்து பறந்து தாவிடலாம்

  ..............................................................

  ..............................................................

  ..............................................................

  ..............................................................

- கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடைக்கு நேராக (✓) அடையாளமிடுங்கள்.

1. ❖ கிரிக்கெட் : மட்டை
   ❖ பாட்மின்டன் : வலை மட்டை
   ❖ கால்பந்து : சல்லடை மட்டை

   A. 1 உம் 2 உம் 3 உம் சரி
   B. 1 உம் 2 உம் சரி
   C. 2 உம் 3 உம் சரி
   D. 1 உம் 3 உம் சரி

2. ❖ கால்பந்து : கோல்
   ❖ கால்பந்து : ரன்
   ❖ கால்பந்து : 11 பேர்

   A. 1 உம் 2 உம் சரி
   B. 1 உம் 2 உம் 3 உம் சரி
   C. 2 உம் 3 உம் சரி
   D. 1 உம் 3 உம் சரி

## கிரிக்கெட்

உலக மக்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்த விளையாட்டு கிரிக்கெட். கிரிக்கெட் ஆட்டக்காரர்களை உலகமெங்கும் உள்ள ரசிகர்கள் போற்றிக் கொண்டாடுகிறார்கள்.



பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இவ்விளையாட்டு இங்கிலாந்தில் விளையாடப்பட்டு வருகிறது. குறிப்பாக, கோடை விடுமுறையை உற்சாகமாய்க் கழிக்க இங்கிலாந்து மக்கள் கண்டுபிடித்ததே கிரிக்கெட். ஆனால் இப்போது எல்லாப் பருவக் காலங்களிலும் பலநாடுகளில் விளையாடப்பட்டு வருகின்றது.

இரண்டு அணிகளிலும் பதினோரு பேர் கொண்ட விளையாட்டு இது. ஓர் அணியின் இரண்டுபேர் மட்டைபிடித்து விளையாட, எதிர் அணியின் ஒருவர் பந்து வீசுவார். அவ்வணியின் மற்ற பத்துபேர்களும் ஃபீல்டிங் செய்கின்றனர். மட்டை பிடித்து விளையாடுபவர் குறிப்பிட்ட சில விதிகளின் படி வெளியேறினால் அவ்வணியின் மற்றொருவர் வந்து விளையாடுவார். இவ்வாறு பத்துப் பேட்ஸ்மேன்களும் வெளியேறிவிட எதிர் அணி வீரர்கள் மட்டை பிடித்து விளையாடுவார்கள். ஆறு பந்துகள் வீசுவதை ஓர் ஓவர் என்பர். பந்தை அடிப்பவர் அடித்த பந்து, தரையைத் தொட்டு, எல்லைக்கோட்டை தொட்டால் நான்கு ரன்கள். தரையில் தொடாமல் எல்லைக்கோட்டிற்கு அப்பால் விழுந்தால் ஆறு ரன்கள். இருபக்க ஸ்டம்புக்கு இடையே ஒரு தடவை ஓடினால் ஒரு ரன் கிடைக்கும். ஒரு நாள் போட்டியில் ஐம்பது ஓவர் பந்து வீசப்படும். இருபது ஓவர் போட்டிகளும் உள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் கிரிக்கெட்டில் உலகளாவிய போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மூன்று நாடுகள் மட்டும் பங்கேற்கும் முத்தரப்புப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.



1975 – ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாள் உலகக் கோப்பைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

1983–ஆம் ஆண்டு உலகக்கோப்பையைக் கபில்தேவ் தலைமையிலான நம் இந்திய அணி கைப்பற்றி இந்தியாவிற்குப் பெருமை தேடித் தந்தது. இருபது ஓவர் உலகக் கோப்பைப் போட்டியில் 2007, 2024 ஆண்டுகளில் இந்தியா கோப்பையைக் கைப்பற்றியது. ஒரு காலத்தில் ஆண்கள் மட்டும் ஆடிய கிரிக்கெட் இப்போது பெண்களும் ஆடுகின்றனர்.

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசியுங்கள். கருத்தைக் கூறுங்கள்.
- விளையாடுவதால் என்னென்ன பயன்கள் கிடைக்கின்றன என்பதை எழுதுங்கள்.
- சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.
  - உலக மக்கள் அனைவரது கவனத்தையும் கவர்ந்த விளையாட்டு
    - கபடி
    - கால்பந்து
    - ஹாக்கி
    - கிரிக்கெட்
  - கிரிக்கெட் விளையாட்டைக் கண்டுபிடித்த நாடு?
    - இந்தியா
    - பிரான்ஸ்
    - இங்கிலாந்து
    - ஜப்பான்
  - கிரிக்கெட்டில் ஒரு குழுவில் எத்தனை பேர் விளையாடலாம்?
    - பதினோரு பேர்
    - பத்து பேர்
    - இருபது பேர்
    - எட்டு பேர்
  - 1983 –ஆம் ஆண்டு உலகக் கோப்பையை இந்திய அணி யாருடைய தலைமையில் வென்றது.
    - சச்சின் டெண்டுல்கர்
    - கபில்தேவ்
    - மகேந்திர சிங் தோணி
    - விராட்கோலி

இரண்டு அணிகள், காலால் உதைத்தல், 11 வீரர்கள், சிவப்பு அட்டை

- மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை வாசித்துக் கால்பந்து விளையாட்டைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.

## உடல் நலம் பேணுவோம்!

ஒட்டப் பந்தய வீரனான ஒட்டகம் ஒன்று, இம்முறை கலந்து கொண்ட ஒட்டப் பந்தயத்தில் தன்னுடைய உடல் நலக்குறைவு காரணமாகத் தோல்வியைத் தழுவியது.

எப்பொழுதும் ஒட்டப் பந்தயத்தில் வென்று வரும் அந்த ஒட்டகம் இம்முறை தோல்வியைத் தழுவியதும் ஆளாளுக்கு அதற்கு யோசனை சொல்ல ஆரம்பித்தனர்.

ஒரு நாய் வந்து அதனிடம்,



'ஏ! ஒட்டகமே! நீ ஓடும்போது இன்னும் கொஞ்சம் வேகமாக ஓடி இருந்தால், நிச்சயம் இம்முறையும் நீ வெற்றி பெற்றிருக்கலாம்!' என்றது.

அடுத்ததாக வந்த ஆமை, 'நீ ஓடிய பொழுது, நீ ஓட்டத்தில் கவனம் வைக்காமல் ஓடினாய்! அதுதான் உனக்கு இம்முறை தோல்வி!' என்றது.

ஒரு நரி வந்தது. 'அண்ணே! ஒட்டகமண்ணே! நீ மற்றவர்களுக்கு இணையாக இம்முறை ஓடிடாமல், அவர்களுக்கு உன் வெற்றியை விட்டுக் கொடுத்து விட்டாய்!' என்றது.

இப்படி ஒவ்வொன்றும் அந்த ஒட்டகத்திற்கு அறிவுரை கூறித் தங்கள் ஆதங்கத்தைத் தீர்த்துக் கொண்டு போயின.

கடைசியாக ஒரு கட்டெறும்பு வந்தது.

அது ஒட்டகத்தின் காலடியை மெதுவாகத் தடவி விட்டவாறு, 'அண்ணே! உங்களுக்கு நான் அறிவுரை கூறத் தகுதியில்லாதவன்! ஏன் என்றால், ஒட்டப் பந்தய வீரனான உங்களுக்கு, ஒரு பந்தயத்தில் எப்படி ஓட வேண்டும். சக போட்டியாளரை எப்படி வெற்றி கொள்ள வேண்டும்



என்பதெல்லாம் அத்துப்படி! அதனால் எனக்கு உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் வைத்திட அனுமதி தாருங்கள்!' என்று அது கேட்டது.

அதுவரை நாய், ஆமை, நரி கேட்ட ஒவ்வொரு கேள்வியிலும் மனம் வெறுத்துப்போயிருந்த ஒட்டகம் இந்தக் கட்டெறும்பின் பேச்சில் கொஞ்சம் ஆறுதலடைந்தது.

அதன் பிறகு...கட்டெறும்பிடம், 'என் தம்பியே!

உன் வேண்டுகோள் என்ன என்பதை சொல்! நான், என்னால் முடிந்த அளவிற்கு, நிறைவேற்றி வைக்கிறேன்!' என்றது.

கட்டெறும்பு அண்ணே! எந்த ஒரு வீரனுக்கும், உடம்பும் உள்ளமும்

எப்பொழுதும் உற்சாகமாக இருக்க வேண்டும்.

நீங்களும் உங்கள் உடல் நலத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டால் உள்ளம் நலம் பெறும்.

வெற்றி என்பதே உங்களின் இலக்காகி விடும்.

இதற்கெல்லாம் அடிப்படையான 'உங்கள் உடல் நலத்தைப் பேணுங்கள்! இதுதான் அண்ணே! என்னுடைய வேண்டுகோள்!' என்றது கட்டெறும்பு.

ஒட்டகம் அந்தக் கட்டெறும்பைத் தன் முகவாயால் தூக்கித் தன் தலையில் வைத்துக் கொண்டாடியது. அதன் பிறகு, அந்தக் கட்டெறும்பைப் பார்த்துக் கூறியது:



'என் அருமைத் தம்பியே!' என் மனம் புரிந்தவனே! நீ சொன்னது அத்தனையும் உண்மை!

என்னுடைய தோல்விக்கான காரணம், என் உடல் நலக் குறைவுதான்.

ஆகாத உணவினை உண்டு, அவதிப்பட்டு விட்டேன்!

"இனி இம்மாதிரியான தவறு நிகழாமல், உன் வேண்டுகோளின்படி நான், என் உடல் நலத்தை நல்ல வண்ணம் பேணிப் பாதுகாப்பேன்."

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்
- கதையில் உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? ஏன்? கூறுங்கள்.
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - வெற்றி : ....................................................................................
  - தோல்வி : ....................................................................................
  - யோசனை : ....................................................................................
  - உடல்நலம் : ....................................................................................
  - ஆரம்பம் : ....................................................................................
- பத்தியைப் படித்துப் பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்துங்கள்.

  ஒட்டகம் அந்தக் கட்டெறும்பை தன் முகவாயால் தூக்கித் தன் தலையில் வைத்துக் கொண்டாடியது அதன் பிறகு அந்தக் கட்டெறும்பைப் பார்த்துக் கூறியது என் அருமைத் தம்பியே என் மனம் புரிந்தவனே நீ சொன்னது அத்தனையும் உண்மை என்னுடைய தோல்விக்கான காரணம் என் உடல் நலக்குறைவுதான்.
- கதையை நன்றாக வாசித்து வினாக்களைத் தயார் செய்து வினாப்போர் நடத்துங்கள்.
- உடற்பயிற்சி செய்வதனால் என்னென்ன நன்மைகள் கிடைக்கின்றன என்பதைக் குறிப்பாக எழுதுங்கள்.
- சுகாதார மன்றத்தின் சார்பாக உடல் நலம் தொடர்பான பொன்மொழிகள் எழுதுங்கள். வகுப்பில் ஒட்டுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டிருக்கும் செயல்களை நடித்துக்காட்டுங்கள்.
  - உடற்பயிற்சி செய்தல்
  - குதித்தல்
  - நீந்துதல்
  - நடைப்பயிற்சி



## அலகு 6

# விருந்தோம்பல்



பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் நம் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு மொழி பேசுபவர்களுக்கும் தனித்தனி கலையும் பண்பாடும் உள்ளன. தேசிய விழாக்களை நாம் இந்தியர் என்ற முறையில் அனைவரும் கொண்டாடுகிறோம்.

# தானம்



## திருக்குறள்

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவது எல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

அனிச்சம் பூ மோந்தவுடன் வாடிவிடும். அதுபோல் முகம் மாறுபட்டு விருந்தினரைப் பார்த்தால் விருந்தினர் வாடி விடுவர்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

உள்ளே இருக்கும் அன்பைத் தாழிட்டு மறைக்க முடியாது. அன்புடையவரின் துன்பத்தைக் காணும் போது வடியும் சிறு கண்ணீரே பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கு உரிமை என்று நினைப்பர். அன்பு உடையவர் பொருளாலும் உடம்பாலும் பிறர்க்கு உரியவராய் வாழ்வர்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கம் மேன்மையைத் தருவதனால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நல்ல ஒழுக்கம் இன்பமான நல்வாழ்வுக்குக் காரணமாக இருக்கும். தீய ஒழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

## செயல்பாடுகள்

- குறளை வாசியுங்கள். கூறுங்கள்.
- குறளுக்கான பொருளை வாசியுங்கள். கூறுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - விருந்தோம்பி – ........................................
  - மோப்பம் – ........................................
  - பூசல் – ........................................
  - என்பு – ........................................
  - இடும்பை – ........................................
- திருவள்ளுவரைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுங்கள்.
- திருக்குறள் பாடல்களைச் சேகரித்துத் தொகுப்பு உருவாக்குங்கள்.

## தானமது விரும்பு

அந்தப் பூனை இரையைத் தேடி அலைந்து கொண்டிருந்தது

அப்போது ஓரிடத்தில், எலி ஒன்று தேங்காய் மூடியைத் திருடி வருவதைப் பார்த்து விட்டு மெதுவாகப் பின் தொடர்ந்து அந்த எலியைப் பிடிக்க வந்தது அந்தப் பூனை. எலி சற்று வேகமாக ஓரிடத்தில் போய் நின்று கீச்.... கீச்.... என்று கத்தியது.

எலி ஏன் இப்படிக் கத்துகிறது என்று பூனையால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே ஓரிடத்தில் மறைந்து நின்று வேடிக்கைப் பார்க்கத் தொடங்கியது. எலியின் கீச்... கீச் என்ற சப்தத்தைக் கேட்டதும் பிற எலிகளும் வேகமாக அதனை நோக்கி ஓடிவந்தன.



அந்த எலி தான் கொண்டு வந்த தேங்காய் மூடியை எல்லா எலிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தது.

எலிகள் எல்லாம் அந்த உணவை ஒற்றுமையாக மிகவும் மகிழ்ச்சியுடன் உண்டன. எல்லா எலிகளும் சென்ற பின்னர், தேங்காய் மூடியைத் தூக்கி வந்த எலி மட்டும் தனியாகத் திரும்பி வந்து கொண்டிருந்த போது, அந்தப் பூனையிடம் மாட்டிக் கொண்டது.

பூனை பாய்ந்தோடிப் போய் அந்த எலியைப் பிடித்து விட்டது. பூனையைக் கண்டு எலி பதறியது. 'பூனையே என்னைக் கொன்று விடாதே!'என்று கெஞ்சிக் கேட்டது .

உடனே பூனை எலியிடம் "எலியே! என்னைக் கண்டு நீ பயப்படத் தேவையில்லை. நான் உன்னைக் கொல்வதற்காகப் பிடிக்கவில்லை. உன்னோடு சற்றுப் பேச வேண்டும் என்று விருப்பப்பட்டேன். அதனால் தான் உன்னைப் பிடித்தேன்" என்று கூறியது.

இதைக் கேட்டு எலி அதிர்ச்சியானது. "என்னோடு நீ எதற்குப் பேச வேண்டும்?" என்று கேட்டது.



எலியைப் பார்த்துப் பூனை "எலியே! சற்று நேரத்திற்கு முன்னர், நீ தேங்காய் மூடியை எடுத்து உனது நண்பர்களுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுத்து உண்டதைக் கண்டேன்.

எது கிடைத்தாலும் தனக்கென்று சுருட்டிக் கொண்டு மற்றவர்களுக்குக் கொடுக்காமல், மற்றவர்களை ஏமாற்றியபடி வாழ்கின்ற இந்தக் காலத்தில், சாதாரண சுண்டெலி நீ பகுத்துண்டு ஒற்றுமையுடன் வாழ்கிறாயே? அதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். உனது தொண்டுள்ளத்திற்கு நான் அடிமை தான்" என்று எலியை விடுவித்தது அந்தப் பூனை.

அதை அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட எலி. "பூனையே! நாம் மட்டுமே எந்த உணவையும் உண்பதால் மகிழ்ச்சி ஏற்படாது. பிறருக்கும் கொடுத்து உண்டால் தான், மகிழ்ச்சியாக இருக்கும். நாம் இந்த உலகில் உயிரோடு இருக்கின்ற நாட்கள் வரையிலும் இப்படி மகிழ்ச்சியாக இருந்து விட்டுப் போகலாமே" என்று கூறியது எலி.

பின்னர் எலியும் பூனையும் அன்புடன் விடைப்பெற்றுச் சென்றன.

– நல்ல சிவம்

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குங்கள்.

  (கொன்று, பூனையே, விடாதே, என்னைக், கண்டேன், பங்கிட்டுக், உண்டதைக், கொடுத்து, தொண்டுள்ளத்திற்கு, உனது, அடிமை, நான்)
- எலியைப் போன்று உணவைப் பங்கிட்ட அனுபவம் உங்களுக்கு இருக்குமல்லவா? எழுதுங்கள்.
- எலி பதறியது ஏன்? எழுதுங்கள்.
- கதையை நிறைவு செய்யுங்கள்.

  பூனைக்கு ஒரு நாள் அப்பம் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு ஓடியது. தூரத்தில் மூன்று பூனைகள் வருவதைப் பார்த்தது. உடனே

  ..............................................................................................................................

  ..............................................................................................................................

  ..............................................................................................................................

## தமிழர் பண்பாடு

பிறருடைய இயல்பு அறிந்து, அதற்குத் தக்கவாறு செயல்படுவதே பண்பாடு எனப்படும். இதனையே 'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று கூறினர். நல்ல பண்பாடுகள் ஒரு சமூகம் மட்டுமல்ல, இந்த உலகையே சிறப்புடன் இயங்க வழிவகுக்கும். தமிழ் மக்கள் பின்பற்றும் பண்பாடுகளில் தலையாய பண்பாடு 'விருந்தோம்பல்' ஆகும். விருந்தோம்பல் என்பது நம்மை நாடி வருவோருக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் உறங்க உறைவிடமும் கொடுத்து உபசரிப்பதாகும். நமது பழங்கால இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை எல்லாமே விருந்தோம்பலைத்தான் சிறப்பித்துப் பேசுகின்றன.



தமிழுக்குப் பெருமை தேடித்தந்த வள்ளுவப் பெருமகனார் தமது திருக்குறளில் ஓர் அதிகாரத்தில் விருந்தோம்பலின் சிறப்பினையே எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. மரணத்தைத் தவிர்க்கும் அருமருந்தாகிய அமுதமே கிடைத்தாலும் அதை விருந்தினருக்கும் கொடுத்து வாழ்வதே நல்லது என்கிறது திருக்குறள்.

கண்ணகியைப் பிரிந்து சென்ற கோவலன் சிலகாலம் கழிந்து திரும்பிவருகிறான். அவனை முக மலர்ச்சியோடு வரவேற்கிறாள் கண்ணகி. பின்னர் அவன் கண்ணகியை நோக்கி, "நான் உன்னைப் பிரிந்திருந்த காலத்தில் உனக்கு வருத்தம் எதுவும் தோன்றவில்லையா?" எனக் கேட்கிறான். அதைக் கேட்ட கண்ணகி, "நான் வேறு எதற்காகவும் வருத்தப்படவில்லை. வந்த விருந்தினர்களை உபசரிக்க இயலாமல் போயிற்றே என்பதற்காகத்தான் மிகவும் வருத்தப்பட்டேன்" என்கிறாள். ஏனெனில் விருந்தோம்பல் என்பது கணவனுடன் சேர்ந்திருந்து செய்ய வேண்டிய ஒன்று. தன் வாழ்க்கைக்கும் மேலாக விருந்தினர் வாழ்க்கையைப் பெரிதெனக் கருதியதை இதனால் அறியலாம். இது சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகளின் விருந்தோம்பல் கருத்து.

காகம் வீட்டின் அருகே வந்து கத்தினால் விருந்தினர் யாரேனும் வருவர் என்பது ஒரு நம்பிக்கை. மகாகவி பாரதியார் வீட்டின் வெளித் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார். அந்நேரம் வீட்டு முற்றத்தில் சில காகங்கள். பாரதிக்கு அந்தக் காகங்கள் விருந்தினர்களாகத் தோன்றுகின்றன. அவர் வீட்டினுள்ளே செல்கிறார். சோறு சமைக்கக் கடன் வாங்கி வைத்திருந்த அரிசியை எடுத்துக் காகங்களுக்கு இடுகிறார். போட்டி போட்டுக்கொண்டு அரிசியைக் கொத்தித் தின்கின்றன காகங்கள். அதைக் கண்டு ஆனந்தப் பரவசம் அடைந்த பாரதியார். "காக்கைக் குருவி எங்கள் சாதி" எனப் பாடுகின்றார்.

மனிதர்களை மட்டுமன்றி, நம்மைத் தேடி வரும் விலங்குகள், பறவைகள் முதலான பிற உயிரினங்களையும் விருந்தினர்களாகக் கண்டு உதவியவர்கள் தமிழர்கள். விருந்தோம்பல் என்னும் பண்பாட்டின் சிறப்பினை இதைவிட மேலாக எப்படிச் சொல்லமுடியும்! பகுத்து உண்டு பல உயிர்களையும் காப்போம்.

– இளந்தமிழன்

## செயல்பாடுகள்

- பாடப் பகுதியை வாசியுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- முதலெழுத்தை மாற்றிச் சொல் உருவாக்குங்கள்.

  மனம் : ..................., ..................., ..................., ...................

  மனை : ..................., ..................., ..................., ...................

  வண்டு : ..................., ..................., ..................., ...................

- பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புங்கள்.
  - கண்ணகியைப் .................. சென்ற கோவலன். (பிரிந்து, பிறிந்து)
  - என் இல்லத்திற்கு வந்த ...................... உபசரித்தேன். (விருந்தினரை, விறுந்தினரை,)
  - தமிழர் பண்பாடு .................. சிறந்தது. (தளை, தலை)
  - வள்ளுவர் ...................... எழுதினார். (திருக்குறள், திருக்குறல்)
- உங்கள் வீட்டில் விருந்தோம்பியது உண்டல்லவா? உங்கள் அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- தமிழ்க் கலைகளோடு தொடர்புடைய படங்கள் சேகரித்துத் தொகுப்பு உருவாக்குங்கள்.



# மாமலை நாடு



## கேரளம் !

கேரள நாடு நல்ல கேரள நாடு – மக்கள்
கேள்வி கேட்டு உயரும் நல்ல கேரள நாடு

மாமலை நாடு நல்ல மாமலை நாடு – மக்கள்
மனம் போல வாழ்கின்ற மாமலை நாடு

அலைபாயும் அரபிக்கடலுக்கு அழகு சேர்த்திட – நல்
ஆனமலை அதற்காகக் குடை பிடித்திட

மாமலைகளாலே மக்கள் மகிழ்வு கொண்டிட –நல்
மனம் கவரும் பெரியாறு மகிழ்வு தந்திட

பாரதப்புழை ஓடி மக்கள் உயிர் காத்திட – நல்
பம்பை யாறு பாய்ந்திங்கு வளம் சேர்த்திட

மா பலா வாழையெல்லாம் வரவேற்றிட
மனமகிழும் இஞ்சி மஞ்சள் கொஞ்சி ஆடிட

மாவேலி மன்னன் இங்கு வந்து பார்த்திட
மனமெல்லாம் உவகையாலே பொங்கி ஓங்கிட

எழிலாலே சிறந்து ஓங்கும் சேரநாடு
எல்லோரும் வரவேற்கும் எந்தன் நாடு

– முனைவர்.சு.இராசேந்திரன்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- இப்பாடலில் உங்களைக் கவர்ந்த வரிகள் எது? கூறுங்கள்.
- ஒத்த ஓசையுடைய சொற்களை எழுதுங்கள்.
- எழுத்துகளை முறைப்படுத்தி சொல் உருவாக்குங்கள்.
    - பி, ர, க், ல், அ, ட, க ................................................
    - லை, ன, ம, ஆ ................................................
    - று, ரி, யா, பெ ................................................
    - த, பா, ழை, ப், ர, பு ................................................
    - வே, ம், கு, ற், ர, வ ................................................
- பாடலின் கருத்துகளைக் கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.

## குஞ்ஞுண்ணி மாஸ்டர்

குட்டையான உருவம், மொட்டைத் தலை. கட்டிக் கண்ணாடி, குறுந்தாடி, எப்போதும் சிரித்த முகம். இடுப்பில் ஒரு வேட்டி. பனியன் போல் சட்டை. தோளில் ஒரு துண்டு. பெயர் சொல்லாமலேயே இவர் யார்? என்று கேட்டால், சிறிதும் சிந்திக்காமல் சட்டெனப் பதில் சொல்லிவிடுவார்கள்... 'குஞ்ஞுண்ணி மாஷ்' என்று. இவரது பெயர் குஞ்ஞுண்ணி. இவர் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியதால் 'குஞ்ஞுண்ணி மாஷ்' என்றே



அனைவராலும் அழைக்கப்பட்டார். இவர் 1927 – ஆம் ஆண்டு மே மாதம் 10 – ஆம் நாள் திருச்சூரில் வலப்பாடு என்ற இடத்தில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த மலையாளக் கவிஞர். இவரது தோற்றத்தைப் போலவே இவரது கவிதைகளும் குறுங் கவிதைகள் தான். குழந்தைகளுக்காக எழுதப்பட்ட கவிதைகளே அதிகம். எனவே இவர் குழந்தைக் கவிஞர் எனவும் அறியப்படுகின்றார். இவரது பெரும்பாலான கவிதைகளும் மிக எளிமையானவை. ஆனால் அவை சிந்திக்க வைக்கும் கவிதைகளாகவும் இருக்கும். ஆரம்பக் காலத்தில் 'குட்டேட்டன்' என்ற புனைப்பெயரில் இதழ்களில் எழுதி வந்தார். கேரள சாகித்ய அகாதமி விருது , குழந்தைகள் இலக்கிய விருது முதலான பல விருதுகள் பெற்றவர். 2006 மார்ச் 26 – ஆம் நாள் 'மாஷ்' காலமானார்.

"வாசித்தாலும் வளரலாம்
வாசிக்காவிட்டாலும் வளரலாம்
வாசித்தால் விளையும்
வாசிக்காவிட்டால் வளையும்"

– குஞ்ஞுண்ணி

என்னும் மாஷின் பாடலடிகள் சிந்தனைக்கு விளக்காகத் திகழ்கிறது.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள், கருத்துகளைக் கூறுங்கள்.
- எதிர்ச் சொற்களை இணைத்து எழுதுங்கள்.
  - எளிமை × கீழே
  - மேலே × கிடைக்கவில்லை
  - கிடைத்தது × ஆடம்பரம்
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - எளிமை : ..............................
  - கவிதை : ..............................
  - ஓய்வு : ..............................
  - வழிகாட்டி : ..............................
- பாடப்பகுதியில் வினாக்கள் தயாரித்து வினா விடை போட்டி நடத்துங்கள்.
- பாரதியார் பற்றிய தகவல் திரட்டி வாழ்க்கைக் குறிப்பு எழுதுங்கள்.
- மலையாளக் கவிஞர்களின் படங்கள் சேகரித்துத் தொகுப்பு உருவாக்குங்கள்.

## புலிக்களி

வந்தாச்சே...

ஓணம் வந்நல்லோ..

கேரளத்தில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்களில் ஒன்று தான் திருவோணம். கேரளத்துப் பாரம்பரியத்துடன் பத்து நாட்கள் மக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள்.



கடுவாக்களி எனப்படும் புலிக்களி ஓணக்காலத்துக் கலைகளில் மிகவும் பிரபலமான ஒன்று. இதனைப் புலி ஆட்டம் எனவும் புலிக்களி எனவும் அழைக்கின்றனர். கேரள மக்கள் கடுவாக்களி என்று அழைக்கின்றனர். இந்த ஆட்டம் ஓணம் திருவிழாவின் நான்காம் ஓணம் எனப்படும் உத்திராடம் நாளில் கொண்டாடப்படுகிறது. இசையின் ஒலிக்கேற்ப ஒருவித தாளத்துடன் புலிவேடமிட்டு ஆடுவர்.

இதன் கரு, புலிவேட்டை தான். அதனால் சிலர் புலி போலவும், சிலர் வேடர்கள் போலவும் வேடம் இட்டு ஆட்டம் போடுவார்கள். ஆண்கள் தான் இதில் பெரும்பாலும் கலந்து கொள்வார்கள்.

களி என்பது மலையாள மொழியில் நடனம் அல்லது ஆட்டத்தைக் குறிக்கும். இந்நாளில் சிவப்பு, கறுப்பு மற்றும் மஞ்சள் வண்ணத்தினால் புலி வேடமிட்டு நடனம் ஆடிவருவார்கள்.

புலிக்களி நடனம் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் கொச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ராமவர்ம சக்தன் தம்புரான் என்ற மன்னனால் ஓணம் விழாவில் தொடங்கி வைக்கப்பட்டதாகும்.



இந்த வேடத்தைப் போட்டுக் கொள்ள ஆயில் பெயிண்ட் பயன்படுத்துகிறார்கள். இதை அழிப்பது சிரமமாக இருந்தாலும் கூட பக்தர்கள் ஆண்டுதோறும் இதனைச் செய்கின்றனர்.

கடந்த 2016 – ஆம் ஆண்டிலிருந்து பெண்களும் ஆண்களைப் போலவே இந்த வேடமிட்டு ஆடி வருகின்றனர்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  வரிசையாக, வேடமிட்டு, சிரமம்
- குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்.
  - சிங்கம், புலி, கரடி, நாய்.
  - மோகினியாட்டம், திருவாதிரை, ஒட்டம்துள்ளல், பரதநாட்டியம்
  - மிளகாய், சேனை, கத்தரிக்காய், தக்காளி.
  - சிவப்பு, புலிக்களி, கறுப்பு, மஞ்சள்
- பாடப்பகுதியை வாசித்து ஐந்து வினாக்களைத் தயாரியுங்கள். வினாவிற்கான விடையும் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- கேரளக் கலைகளோடு தொடர்புடைய படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு தயாரியுங்கள். அடிக்குறிப்பு எழுத மறவாதீர்.



# அரசு



## குடியரசு

குடியரசு என்பது மக்களரசு;
குழந்தைகள் போற்றும் நல்லரசு
கொடியை ஏற்றி வணங்கிடுவோம்;
கோலத் தமிழால் வாழ்த்திடுவோம்!

மக்களை மக்கள் ஆண்டிடவே,
மக்கள் கண்டது இவ்வரசு !
அக்காள் அண்ணன் வாக்களிக்க
வாய்ப்பைத் தந்த உயர்அரசு!

எல்லாரும் மன்னர் எனும் அரசு;
ஏழைக் குதவும் அரசிதனை,
நல்ல முறையில் காத்திடுவோம்!
நாட்டின் பெருமை உயர்த்திடுவோம்.

– மயிலை முத்தெழிலன்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டுடன் பாடுங்கள்.
- மாதிரி போன்று வளரும் சொற்களை எழுதுங்கள்.

  எ.கா : ஏற்றினார்.
  கொடி ஏற்றினார்
  தலைமை ஆசிரியர் கொடி ஏற்றினார்.
  தலைமை ஆசிரியர் பள்ளியில் தேசியக் கொடி ஏற்றினார்.

  - வந்தான்

    ..........................................................................................
    ..........................................................................................
    ..........................................................................................

  - படித்தாள்

    ..........................................................................................
    ..........................................................................................
    ..........................................................................................

- பாடலின் கருத்துகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

## சொற்பொழிவு

(திருவனந்தபுரம் அரசு தமிழ் ஆரம்பப்பள்ளியில் 75 – வது குடியரசு தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று தேசியக் கொடியை ஏற்றிவைத்துத் தலைமை ஆசிரியர் உரையாற்றினார்.)

அன்பு மாணவச் செல்வங்களே! பெற்றோர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

இன்று குடியரசு தின விழா." நமது நாடு 1950–ஆம் ஆண்டு ஜனவரி



மாதம் 26 – ஆம் நாள் குடியரசு நாடானது. நாடு விடுதலை பெற்ற பின்பும் நாட்டின் எல்லாப் பகுதிகளும் அன்று இந்திய நாட்டின் ஆட்சிக்குக் கீழ் வரவில்லை. சிற்றரசுகள் விலகி நின்றன. விலகி நின்ற அந்தச் சிற்றரசுகளை ஒன்றிணைத்து மத்திய அரசின் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தால் மட்டுமே நாட்டில் ஒற்றுமை உண்டாகும். இதற்காகப் பாடுபட்டவர் தான் சர்தார் வல்லபாய் பட்டேல். மொழி, இன அடிப்படையில் பிளவுபட்டுக்கிடந்த சிற்றரசுகளை ஒன்றிணைக்க உழைத்தார். அதற்காக அவர் மிகவும் சிரமப்பட்டார். தைரியத்துடன் இந்தச் செயலில் ஈடுபட்டதால் இவரை இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கிறோம்.

இவரது அரிய முயற்சியால் நாட்டின் எல்லாப்பகுதிகளும் ஒன்றிணைந்து மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது. எல்லாரும் இந்தியத் தாயின் மக்கள் என்னும் உணர்வுடன் ஒற்றுமையுடன் இன்று எல்லோரும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு நமது நாடு எல்லா அதிகாரமும் பெற்ற ஒரு குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. இதையெல்லாம் மனதில் கொண்டு நாம் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வோம் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

நன்றி வணக்கம்!

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள். கலந்துரையாடுங்கள்.
- கீழ்க்காணும் தினங்கள் கொண்டாடும் நாள், மாதம் எழுதுங்கள்.
  - சுதந்திரதினம் : ..............................................................
  - குடியரசு தினம் : ..............................................................
  - குழந்தைகள் தினம் : ..............................................................
  - தொழிலாளர் தினம் : ..............................................................
  - முதியோர் தினம் : ..............................................................
- பாடப்பகுதியை வாசித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- சுதந்திர தின விழாவில் உரையாற்றுவதற்குச் சொற்பொழிவுக் குறிப்பு தயாராக்குங்கள்.

## குழந்தைகள் தினவிழா

குழந்தைகள்தான் ஒரு நாட்டின் மனித வளச் செல்வங்கள். நம் நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 14–ஆம் தேதி குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. சுதந்திர தினம், குடியரசு தினம் எல்லாம் சரி, குழந்தைகளுக்காகத் தனியாக குழந்தைகள் தினம் என்று ஒன்று எதற்காக? காரணம்?



இந்தியாவின் முன்னாள் பிரதமராக விளங்கிய பண்டித ஜவஹர்லால் நேரு குழந்தைகளை மிகவும் நேசித்தவர். அவரது பிறந்த நாள் நவம்பர் 14–ஆம் நாள். நேருஜி அவர்கள் தனது பிறந்த நாளை நேரு பிறந்த நாள் என்று தன் பெயரில் கொண்டாடாமல், இந்தியக் குழந்தைகளைக் கொண்டாடும் வகையில் அந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடச் சொன்னார்.

தன்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் நேரு தனது இருப்பிடத்திற்குக் குழந்தைகளை வரவழைத்து, அவர்களுடன் விளையாடி மகிழ்வார். குழந்தைகளுக்கு இனிய தின்பண்டங்கள் வழங்குவார். அன்றைய தினம் முழுவதையும் குழந்தைகளுடன் செலவழித்து, என் வாழ்நாளின் ஒருநாளைப் பயனுள்ளதாக ஆக்கினேன் என்பார் நேருஜி. குழந்தைகள் தினத்தன்று எல்லாக் குழந்தைகளுக்கும் இனிப்பு வழங்கப்படும். விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும். சிறுவர்களுக்கு ஏற்ற திரைப்படங்களும் காட்டப்படும். பரிசுப் போட்டிகள் உண்டு. நேருஜியின் விருப்பத்திற்கேற்ப நவம்பர் 14 – ஆம் நாள் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கலந்துரையாடுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- சரியான சொல்லை எடுத்து நிரப்புங்கள்.
    - நவம்பர் 14 – ஆம் நாள் .................. தினம் கொண்டாடப்படுகிறது. (குளந்தைகள், குழந்தைகள்)
    - இந்தியாவின் ................. பிரதமர் நேருஜி. (முன்னாள், முன்னால்)
    - அவரது பிறந்த ............. குழந்தைகள் தினமாகக் கொண்டாடச் சொன்னார். (நாழை, நாளை)
    - அன்றைய தினம் ............. குழந்தைகளுடன் செலவழித்தார். (முலுவதும், முழுவதும்)
- பாடப்பகுதியின் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- குழந்தைகள் தினத்தில் உரையாற்ற சொற்பொழிவுக் குறிப்பு தயாராக்குங்கள்.



அலகு 7

# தொழில்கள்



நமதுநாடு குடிசைத்தொழிலிலும் வேளாண்தொழிலிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. வேளாண் தொழிலை நம்பியே பல்லாயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நமக்கு உணவளிக்கும் இத்தொழில்களைப் பாதுகாப்போம்.

# குடிசைத் தொழில்



## குயவன்

தரையோடு தரையாய்ச் சுழலும் உருளை !
அதிலே குயவர் செய்வார் பொருளை !
கரகர வென்று சுழலும் அதன்மேல்
களிமண் வைத்துப் பிடிப்பார் விரலால் !

விரைவில் சட்டி பானைகள் முடியும் !
விளக்கும் உழக்கும் தொட்டியும் முடியும் !
சுருக்காய்ச் செய்த பானை சட்டி
சூளை போட்டுச் செய்வார் கெட்டி !

உரித்த மாம்பழத் தோலைப் போலே
உருக்கள் மண்ணாற் செய்யும் வேலை
இருக்கும் வேலை எதிலும் பெரிதே !
இப்படிச் செய்தல் எவர்க்கும் அரிதே !

சிரிப்ப துண்டு மண் பாண்டத்தைச்
சிறுமை என்று நினைப்ப துண்டு
பெருத்த நன்மை மண்பாண்டத்தால்
சமையல் செய்து சாப்பிடு வதனால். !

– பாரதிதாசன்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்து இராகத்துடன் பாடுங்கள்.
- முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுங்கள்.
- முதல் எழுத்தை மாற்றிச் சொற்கள் எழுதுங்கள்.
    - உரித்த ...................., ...................., ...................., ....................
    - விதை ...................., ...................., ...................., ....................
    - தரை ...................., ...................., ...................., ....................
- பாடலின் கருத்துகளைக் கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- மண்ணால் செய்த பொருட்களின் படங்கள் சேகரித்துத் தொகுப்பாக்குங்கள்.

## மெழுகுவர்த்தி தன் வரலாறு

பரபரப்பாக ஓடினாள் கலா. அம்மா திகைத்தாள். என்ன கலா? என்ன அவசரம்? நாளைக்குக் கணக்குத் தேர்வு அம்மா. இந்தச் சின்ன வெளிச்சத்தில் படிக்கலாம்னு ஓடுறேன். சின்ன வெளிச்சமா! அந்தச் சுவிட்ச் போடு! ஐய்யய்யோ கரண்ட் இல்லம்மா? கரண்ட் தானே இல்ல. ஆனா ஒரு வாரத்துக்கு முன்னாடி வாங்கின மெழுகுவர்த்தி எங்கோ வைத்துள்ளேன். ஞாபகமும் இல்லை. அதைத் தேடு. எங்கும் தேடிப்பார்த்தேன். காணவே இல்ல. எப்படி தான் படிப்பேனோ? என்று கலா வருந்தினாள். அப்போது முனகல் சத்தம் கேட்டது. அவள் பயந்து சுற்றும் முற்றும் பார்த்தாள்.

கலா .....கலா.... பயப்படாதே! நான் எங்கும் செல்லவில்லை. இங்கே தான் இருக்கிறேன் என்ற சத்தம் காதில் ஒலித்தது. திரும்பவும் தேடத் தொடங்கினாள். 'ஏய்... கலா... இங்கே பாரு!'. சத்தம் கேட்ட இடத்தில் திரும்பினாள்; கண்களை உருட்டினாள்; அதோ அங்கே ஒரு மெழுகுவர்த்தி!



அவளது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஓடோடிச் சென்று மெழுகுவர்த்தியை எடுத்து முத்தமிட்டாள். அது அவளோடு பேசத் தொடங்கியது. " ஆமாம் நீ எப்படி இங்கே வந்தாய்?" கலா கேட்டாள்.

கலாவின் கேள்விக்கு மெழுகுவர்த்தி பதில் கூறியது.

நாங்கள் பல இடங்களில் பிறக்கிறோம். சிலர் குடிசைகளிலும் சிலர் பெரிய தொழிற்சாலைகளில் பிறந்தாலும்

அதிகமானோர் குடிசைகளில் தான் பிறக்கின்றனர். அதற்குக் காரணம் எங்களை உருவாக்கக் குறைந்த இடமும் குறைந்த செலவும் போதுமானது. "ஆனாலும் பெரிய இடங்களில் பிறப்பது தானே பெருமை!" கலா கேட்டாள். மெழுகுவர்த்தி சிரித்துக் கொண்டே சொன்னது……." நாம் எங்குப் பிறந்தோம் என்பதில் பெருமை இல்லை. எப்படிப் பிறருக்கு உதவுகிறோம் என்பதில் தானே பெருமை!"

"ஆமாம்! அதுதான் உண்மை. சரி, உங்கள் பிறப்பைப் பற்றிச் சொல்லேன்" கலா கேட்டாள்.

"சொல்கிறேன்……. கேள். முதலில், மெழுகு உருக்கி ஊற்றக்கூடிய பிளாஸ்டிக் குழாய்களையும் இடையில் இடும் திரிகளையும் பக்குவப்படுத்தி வைப்பார்கள். திரிகளின் மேலே மெழுகைத் தடவுவார்கள். திரியானது நடுவிலே இருக்கும் வண்ணம் அமைப்பார்கள். ஓர் அகன்ற பாத்திரத்தில் மெழுகைப் போட்டு மிதமான நெருப்பில் உருகச் செய்வார்கள். மெழுகு உருகும் போது தூளாக்கி வைத்துள்ள சீமைச்சுண்ணாம்பையும் படிகாரத்தையும் போடுவார்கள். மூன்றையும் நன்கு கலக்கிக் கொண்டிருப்பார்கள். கலவை இறுக ஆரம்பிக்கும் போது சுத்தமான தண்ணீரை ஊற்றுவார்கள். பின்பு பாரபின் மெழுகையும் கலக்குவார்கள். அப்போது கலவை தண்ணீர் போலாகும். உடனே குங்குலியத்தைக் கலக்குவார்கள். பின்பு, அடுப்பிலிருந்து இறக்கி சல்பியூரிக் ஆசிட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ப்பார்கள். இக்கலவை மிருதுவான பதத்தில் வரும் போது குழாய்க்குள் ஊற்றுவார்கள். குழாயை இருபது அல்லது முப்பது நிமிடம் தண்ணீரில் குளிர வைப்பார்கள். தொடர்ந்து குழாயின் ஒரு புறத்தைத் துண்டித்துவிட்டு, மெதுவாகத் தட்டும் போது நாங்கள் வெளியே வருவோம். எங்கள் அளவுக்கும் பருமனுக்கும் ஏற்றவாறு குழாயைப் பயன்படுத்தலாம். அதன் பின் அட்டைப் பெட்டிக்குள் அகப்பட்டு விற்பனைக்காகக் கடைகளுக்குச் செல்வோம்.

நாங்கள் இருக்கும் இடத்தில் வந்து எங்களைப் பலர் வாங்கிச் செல்வார்கள். அப்படியாக ஒரு நாள் உங்கள் அம்மா என்னை வாங்கி வந்து வீட்டில் பத்திரமாக மறைத்து வைத்தார்கள். எங்களால் மறைந்து இருக்க முடியாது. நாங்கள் எங்களை மாய்த்துக்கொண்டு பிறருக்கு ஒளி கொடுக்கக் கூடியவர்கள். நாங்கள் எங்களுக்காக வாழ்வது இல்லை. பிறருக்காகவே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். நீயும் அதுபோல் உன்னால் முடிந்த நன்மைகளைச் சமூகத்திற்குச் செய்து பயன்படுமாறு வாழ வேண்டும். மிக்க மகிழ்ச்சி! "எனக்குப் படிக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு மெழுகுவர்த்தியை எடுத்துக்கொண்டு ஓடினாள் கலா.

– சிவப்பிரியன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள். கலந்துரையாடுங்கள்.
- கீழ் வரும் சொற்களை வாக்கியத்தில் அமையுங்கள்.
  - திகைத்தாள் : ......................................
  - வருந்தினாள் : ......................................
  - சுற்றும் முற்றும் : ......................................
  - திரும்பினார் : ......................................
  - ஆட்டினாள் : ......................................
- "நான் எனக்காக வாழ்வது இல்லை" என மெழுகுவர்த்தி கூறக் காரணம் என்ன? குறிப்பு எழுதுங்கள்.
- வேறு என்னென்ன குடிசைத் தொழில்கள் உள்ளன?. கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- கலாவும், மெழுகுவர்த்தியும் பேசியதை உரையாடலாக எழுதுங்கள்.
- 'பென்சில் பேசினால்' தன்னைப்பற்றி என்ன கூறியிருக்கும் எழுதுங்கள்.

## எவ்வளவு பொன் கிடைக்கும்?

ஓர் ஊரில் மண்ணாங்கட்டி என்றொரு மூடன் இருந்தான். அவனுக்குப் பொருத்தமான மனைவி வாய்த்திருந்தாள்.

மண்ணாங்கட்டிக்கு ஐந்து காணி நிலம் இருந்தது. அந்த ஆண்டு நல்ல மழை. எல்லோரும் விதைப்பதற்காக வயலுக்குச் சென்றார்கள்.

மண்ணாங்கட்டியும் அவன் மனைவியும் விதைகளை எடுத்துக் கொண்டு போய், தங்கள் நிலத்தில் தூவித் தூவி விதைத்தனர்.

அந்த ஆண்டு காலம் தவறாமல் நல்ல மழை பெய்து எல்லோர் வயலிலும் நல்ல விளைச்சல். மண்ணாங்கட்டி வயலிலோ புற்கள் நன்றாக செழித்து உயரத்திற்கு வளர்ந்திருந்தன. 'இந்தப் புற்களை அறுத்து விற்றாலே நல்ல பணம் கிடைக்கும்' என்று நினைத்தான் அவன்.

வான் வழியாகப் பறந்து சென்று கொண்டிருந்த இந்திர லோகத்து யானையின் கண்களை மண்ணாங்கட்டியின் வயலில் பச்சை பசேலென்று செழிப்பாக வளர்ந்து இருந்த புற்கள் கவர்ந்து இழுத்தன.

நேராக வயலில் இறங்கிய யானை வயிறு முட்ட புற்களைச் சாப்பிட்டு விட்டு இந்திரலோகம் சென்றது.



மறுநாள் தன் வயலைப் பார்த்த மண்ணாங்கட்டிக்கு பகீரென்றது. யாராக இருந்தாலும் கண்டு பிடிப்பேன் என்று புதர் மறைவில் பதுங்கி இருந்தான் அவன்.

வழக்கம்போல் புல்லை உண்பதற்காக யானை மறுநாளும் வானிலிருந்து கீழே இறங்கியது. நன்றாகப் புற்களை மேய்ந்தது.

மண்ணாங்கட்டி திடீரென்று பாய்ந்து அதன் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

அவ்வளவுதான்! பயந்து போன யானை வான் உலகத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கியது. மண்ணாங்கட்டியோ தான் பிடித்த பிடியை விடவே இல்லை.

தேவருலகத்தில் யானையுடன் மண்ணாங்கட்டி இறங்கினான்.

அவனுக்கு ஏற்பட்ட இழப்பை அறிந்த இந்திரன் "இங்கிருந்து எவ்வளவு பொன் உன்னால் எடுத்துச் செல்ல முடியுமோ அவ்வளவு எடுத்துச் செல்லலாம்" என்று அருள் புரிந்தான்.

ஏராளமான பொன்னை மூட்டையாகக் கட்டி யானையின் முதுகில் ஏற்றிக் கொண்டு தன் ஊர் சேர்ந்தான் மண்ணாங்கட்டி.

அவன் மனைவி தன் கணவனுக்குக் கிடைத்த பெரும் செல்வத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தாள். இருவரும் முட்டாள்கள். ஆதலால் இந்த இரகசியம் ஊர் முழுவதும் தெரிந்து விட்டது.

மறுநாளும் தேவருலகம் சென்று ஏராளமான பொன் கொண்டு வருவதாகத் தன் மனைவியிடம் சொன்னான் மண்ணாங்கட்டி.

யானை வரும் நேரம், மண்ணாங்கட்டி பதுங்கி இருந்தான்.

அவனறியாமல் ஊர் மக்கள் பலரும் பொன் கொண்டு வரும் ஆசையால் அந்த வயலில் பதுங்கிக் கொண்டிருந்தனர்.

பிறகு, யானை வானிலிருந்து வயலுக்குள் இறங்கிப் புற்களை மேய்ந்தது. வயிறு நிரம்பியதும் தேவருலகத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கியது.

உடனே வயலில் பதுங்கிக் கொண்டிருந்த மண்ணாங்கட்டி பாய்ந்துசென்று



யானையின் வாலைப் பற்றி யானையுடன் பறந்தான். அவனைப் பின் பற்றி அந்த ஊர் மக்களும் பறந்தனர்.

யானை தேவருலகத்தை நெருங்கிக் கொண்டு இருந்தது.

கீழே தொங்கிக்கொண்டிருந்தவர்கள் மண்ணாங்கட்டியைப் பார்த்து "அண்ணே நாம் திரும்பி வரும்போது நம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பொன் கிடைக்கும்" என்று கேட்டனர்.

உடனே மண்ணாங்கட்டி "இவ்வளவு கிடைக்கும்" என்று யானையின் வாலைப் பிடித்திருந்த தன் கையால் அகல விரித்துக் காட்ட முயன்றான்.

அவ்வளவுதான் எல்லோரும் தொபீரெனக் கீழே விழுந்தனர்.

– எஸ். செல்வி

## செயல்பாடுகள்

- கதையை வாசியுங்கள். கலந்துரையாடுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - காணிநிலம் : ..........................................................
  - மரக்கால் : ..........................................................
  - கவர்ந்து : ..........................................................
- சொற்களை அகரவரிசையில் எழுதுங்கள்.
  - மெதுவாக, மின்னல், மாந்தர், மணியக்காரர், மீண்டும், முன்னர்.
- யானையோடு சேர்ந்து இந்திரலோகத்தில் இறங்கிய மண்ணாங்கட்டி இந்திரனிடம் என்ன கூறியிருப்பான்? எழுதுங்கள்.
- யானையுடன் அனைவரும் தேவருலகம் சென்றிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? கூறுங்கள். எழுதுங்கள்.



# புஞ்சை



## பருத்தி!

கரிசல் நிலத்திலே நான்வளர்வேன் – என்னைக்
கண்போலக் காத்திடின் பயன் தருவேன்

பெரிதென உலகோரால் புகழ்பெறுவேன் – நாளும்
பெருமையாய் வாழ்ந்திடத் துணைபுரிவேன்!

இராட்டைகள் சுற்றிட உதவிடுவேன் – அந்த
இராட்டைகளால் பொருள் தந்திடுவேன்

ஏற்றுமதி செய்யும் பொருளாவேன் – நாட்டில்
ஏழ்மையைப் போக்கிடத் துணையாவேன்!

தொழில்வளம் பெருகிட வித்தானேன் – ஆலைத்
தொழிலாளரின் பெரும் சொத்தாவேன்

பசுநல்ல பால்தர சத்தாவேன் – நான்
பால்போல் திகழ்வதால் முத்தாவேன்!

பஞ்சணை மெத்தையாய் நானாவேன் – மிகப்
பாங்குடன் தலையணை இனிதாவேன்

கொடிகளைக் கட்டிடும் கயிறாவேன் – அந்தக்
கோலமிகுக் கொடி நானாவேன்!

எண்ணெய் எடுக்கப் பொருளாவேன் – பலர்
இனிதே சுவைத்திடப் பாலாவேன்

மாற்றுப்பயிர் செய்ய நானாவேன் – நல்ல
மண்வளம் பெருகிடப் பயனாவேன்!

மானத்துடன் வாழ உடையாவேன் – எழில்
மாடத்தில் தொங்கும் திரையாவேன்

உடலுக்கு நற்சுகம் தந்திடுவேன் – பாரில்
ஒப்பற்ற ஆடையாய்த் திகழ்ந்திடுவேன்!

– சி. இராமசாமி

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - ஏழ்மை : ....................................................
  - பஞ்சணை : ....................................................
  - எழில் : ....................................................
  - மாடம் : ....................................................
- இரு சொல் ஆக்குங்கள்.
  - பொருளாவேன் ....................................................................
  - பாலாவேன் ....................................................................
  - முத்தாவேன் ....................................................................
  - இனிதாவேன் ....................................................................
  - சொத்தாவேன் ....................................................................
- பாடலின் கருத்துகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- பாடலை முழுமையாக்குங்கள்.

  வண்டல் நிலத்திலே நான் வளர்வேன்
  என்னைக் காத்திடின் பயன் தருவேன்

  .........................................................................................
  .........................................................................................
  .........................................................................................
  .........................................................................................

## களையெடுக்கும் ரோபோ

விவசாயத்தில் களையெடுக்கும் பணி மிக முக்கியமானது. தாவரங்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தி, மகசூலைப் பெருக்க களையெடுத்தல் அவசியமாகிறது. களைச்செடிகளைச் சரியாக இனம் கண்டு அகற்றுவது சவால் நிறைந்த பணி. எண்ணிக்கையில் அதிகமான ஊழியர்களைக் கொண்டுதான் அதிக பரப்பளவிலான களைகளை அகற்ற முடியும்.



தொழில்நுட்ப வளர்ச்சியால் களைகளை எளிதில் அகற்றவும் ரோபோ வந்துவிட்டது. அமெரிக்கத் தொழில் முனைவோரான ஜோயி ஜோன்ஸ் என்பவர் களையெடுக்கும் 'டெர்டில்' ரோபோவை வடிவமைத்துள்ளார். இது சூரியசக்திமூலம் ஆற்றல் பெற்று இயங்கும். எல்லா காலநிலைக்கும் ஏற்றது. அதாவது வெயில், மழைக்காக நீங்கள் ஓய்வெடுத்தாலும் களைப்பின்றி களையெடுக்கக் கூடியது இந்த ரோபோ. இதில் உள்ள சென்சார்கள், களைகளை எளிதாக இனம் காணக்கூடியது. பெரிய களைகளாகவோ, தடைகளாகவோ இருந்தால் ஆழமாகத் தோண்டி அப்புறப்படுத்தக் கூடியது. இந்த ரோபோவை முந்நூறு அமெரிக்க டாலர் விலையில் விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளார் அதன் தயாரிப்பாளர்.

– சுதன்

### செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள். கலந்துரையாடுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - பணி – ...................................
  - மகசூல் – ...................................

- அகற்றுதல் – ..............................
- ஆற்றல் – ..............................

- உங்களிடம் ரோபோ ஒன்று இருந்தால் என்ன செய்வீர்கள்? கலந்துரையாடிக் கருத்துகளை எழுதுங்கள்.
- ரோபோ வேறு என்னென்ன வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது? தகவல் திரட்டிக் குறிப்பு எழுதுங்கள்.

## வேளாண் பழமொழிகள்

பழமொழிகள் ஒரு சமூகத்தில் நீண்ட காலமாகப் பழக்கத்தில் இருந்துவரும் ஒன்றாகும். மக்களின் வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பழமொழிகள் தோன்றுகின்றன. குறைந்த சொற்களைக் கொண்டு நிறைந்த பொருளை இப்பழமொழிகள் தருகின்றன. மனதில் எளிதாகப் பதிய வைக்கவும் உதவுகின்றன. பொதுவாக நாம் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டும் விதத்தில் நகைச்சுவையுடன் கூடிய பலவகைப்பட்ட பழமொழிகள் உள்ளன.

| பழமொழிகள் | விளக்கம் |
|---|---|
| 'அகல உழுவதை விட ஆழ உழு' | பயிர் செய்வதற்கு அகலமாக உழுவதை விட ஆழமாக உழ வேண்டும். ஆழ உழும்போது அடிமண் மேலாக வரும். இதனால் வேளாண்மை பயிர் செழித்து வளரும். |
| 'உழுதவன் பயிரிலே கை வைக்காதே' | பயிர்களுக்குக் கெடுதல் செய்யக் கூடாது. |
| 'பருவத்தே பயிர் செய்' | பருவம் தவறிப் பயிர் செய்தால் பலன் கிடைக்காது. அதே மாதிரி எந்தச் செயலையும் அதற்குரிய காலத்தில் செய்ய வேண்டும். |
| 'வெள்ளமே ஆனாலும் பள்ளத்தே பயிர் செய்' | வெள்ளம் வந்தாலும் பள்ளமான இடத்தில் பயிர் செய்தால், பயிருக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும். அதனால் விளைச்சல் பெருகும். |

| | |
|---|---|
| 'ஆற்று வண்டல் தேற்றும் பயிரை' | ஆற்று வண்டல் வளமாக உள்ளதால் அது பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்கும். |
| 'எள்ளுக்கு ஏழு உழவு' | எள் விதைப்பதற்கு முன்னர் நிலத்தை ஏழு முறை உழுதல் வேண்டும். அப்போதுதான் எள் நன்கு முளைத்து வளர்ந்து பலனளிக்கும். |
| 'சொத்தைப் போல் விதையைப் பேணு' | வேளாண்மை செய்பவன் தனது சொத்துகளைப் பாதுகாப்பது போல விதையைப் பாதுகாக்க வேண்டும். |
| 'தை மழை நெய் மழை' | தை மாதத்தில் பெய்யும் சிறிய மழை பயிர்களுக்கு நல்லது. அதனால் பயிர்கள் செழிப்படையும். |

## செயல்பாடுகள்

- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - அகலம் – ..................................
  - பருவம் – ..................................
  - தேற்றும் – ..................................
  - பேணு – ..................................
- வேளாண்மை இல்லையெனில் என்ன நிகழும். கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- கதையை நிறைவு செய்யுங்கள்.

  காட்டிலுள்ள ஒரு மரத்தில் இரு குருவிகள் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. ஒரு நாள் இடி மின்னலுடன் கனமழை பெய்தது. அப்போது மழையில் நனைந்து நடுங்கியபடி ஒரு குரங்கு மரத்தின் அடியில் வந்து நின்றது. குருவிகள் குரங்கைப் பார்த்து ..........................................

  ..................................................................................................
  ..................................................................................................
  ..................................................................................................
  ..................................................................................................
  ..................................................................................................
  ..............................................................




- நூலகத்திலிருந்து பழமொழிகளைத் திரட்டித் தொகுப்பாக்குங்கள்.

# வண்ண வண்ண பூக்கள்



## வண்ணத்துப்பூச்சி

வண்ணமேனி அழகைக் கொண்ட
வண்ணத்துப் பூச்சி – இங்கு
உண்ணுந் தேனைத் தேடித் தேடி
உலவித் திரியுதே.

பூக்கள் நிறைந்த தோட்டத்திற்குப்
பறந்து போகுது – அந்தப்
பூக்கள் கசங்கிடாமல் தேனைப்
பிரித்தே உண்ணுது.

பலவிதத்தில் வண்ணங் குழைத்து
புள்ளி வைத்ததார்? – தேனை
மலரிலிருந்து பிரித்தெடுக்கும்
முறையைச் சொன்னதார்?

வண்ணம் பலவும் பெற்றதாலே
வண்ணத்துப் பூச்சி – என்று
எண்ணித் தானோ உனக்கே யிந்தப்
பெயரை இட்டனர்.

– புலவர் சி மாணிக்கம்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் உங்களுக்கு விருப்பமான வரிகள் எது? ஏன்? கூறுங்கள்.
- கீழ் வரும் சொற்களை வாக்கியத்தில் அமையுங்கள்.
    - தோட்டம் – ........................................................................................
    - பூக்கள் – ........................................................................................
    - தேன் – ........................................................................................
    - அழகு – ........................................................................................
    - வண்ணம் – ........................................................................................
- பாடலின் கருத்துகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- உங்களுக்குச் சிறகு முளைத்தால் என்ன செய்வீர்கள்? எழுதுங்கள்.

## அழகி

ஒரு சிறிய தோட்டத்தில் ஓர் எறும்புப் புற்று இருந்தது. அந்த எறும்புப் புற்றிலிருந்த எறும்புகள் பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தின் மீது ஏறிக் கொண்டு இருந்தன. அந்த மரத்திற்குப் பக்கத்தில் சிறிய முசுக்கொட்டை செடியொன்று இருந்தது.

அந்தச் செடியின் ஓரிடத்தில் ஒரு சிறிய கூடு இருந்தது. அந்தப் பஞ்சுக் கூட்டிற்குள் புழுவொன்று மெல்ல வாலாட்டிக் கொண்டு இருந்தது. அதைக் காணவே அசிங்கமாகக் கறுப்பாக இருந்தது. அது ஒரு பட்டுப்



புழு. அதுதான் நன்கு வளர்ந்து கூட்டுப் புழுவாகிப் பின், அழகிய பட்டுப் பூச்சி ஆகும். அந்த எறும்புக் கூட்டத்தில் பொல்லாத தீய குணமும் குறும்பும் கொண்ட ஓர் எறும்பு இருந்தது. அந்த எறும்பு மரத்தடியில் இருந்து செடியில் வாழும் புழுவைக் கண்டது.

உடனே 'ஓ' சிறிய புழுவே உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் பாவமாக உள்ளது. எங்களைப் பார். எத்தனை உயரமான மரத்திலும் எளிதாக ஏறிச் செல்கிறோம். ஆனால், உனக்கு ஒரு போதும் உயரமான மரத்தில் ஏற முடியாது. "பாவம், உங்களது பிறவி என்ன செய்வது.?" என்று கேட்டது. அதனைக் கேட்ட மற்ற எறும்புகள் கேலியாகச் சிரித்தன.

புழு அமைதியாகப் பதில் ஏதும் கூறாமல் இருந்தது. பின் எறும்புகள் அந்தப் புழுவைக் கேலியும் கிண்டலும் செய்தபடி அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டன. சிறிது நாட்கள் ஆனது.

ஒரு நாள் அதே எறும்புகள் மீண்டும் அந்த மரத்தில் மேலே ஏறிச் சென்றன. அப்போது முசுக்கொட்டை செடியின் அருகில் பட்டுப் புழுவின் கூடு மட்டும் இருந்தது. சுற்றிலும் பார்த்தன. அந்தப் பட்டுப் புழுவைக் காணவே இல்லை. உடனே அந்த எறும்புகள், பாவம் அந்தப் புழு கூட்டிலேயே தனது வாழ்வை முடித்துக் கொண்டது போலும் என்று கூறிக் கேலியாகச் சிரித்தன. அப்போது எறும்புகளின் தலைக்கு மேலிருந்து, "எறும்பு நண்பர்களே!" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது.

எறும்புகள் மேலே பார்த்தன. வானத்தில் மிக அழகிய பட்டுப் பூச்சி ஒன்று சிறகடித்தபடி நின்றது.

அந்தப் பட்டுப்பூச்சி எறும்புகளைப் பார்த்து, "நண்பர்களே! இப்போது நான் உங்களை விட மிக உயரமான வானில் சிறகடித்துப் பறக்கிறேன். உங்களால் வெறும் மரத்திலும் உயரமான சுவர்களிலும் மட்டும்தான் ஏற முடியும். ஆனால், என்னால் அதை விட மிக உயரமான மலைக்கு மேலும் வானம் வரையிலும் பறக்க முடியும்" என்று கூறியது.



மேலும் இதற்காக உங்கள் பிறவியை ஈனப் பிறவி

என்று நான் கூறவில்லை. யார் யாருக்கு என்ன திறமை தேவையோ அந்தத் திறமைகளை அவரவர்க்கு இயற்கை தருகிறது. இதனால் நமது திறமைகளுக்காக நாம் கர்வப்பட்டு பிறரை இகழக் கூடாது. அதைப் புரிந்து கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறியது. பாவம் எறும்புகள் இப்போது தலைகுனிந்து சென்றன.

– நாட்டுப்புற கதைகள்

## செயல்பாடுகள்

- கதையை வாசியுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.
- மாதிரிபோன்று தொடர் எழுதுங்கள்.
  எ.கா : எறும்பு இருந்தது. எறும்புகள் இருந்தன.
  - மரத்தில் புழு இருந்தது. ..........................................
  - தோட்டத்தில் மரம் இருந்தது. ..........................................
  - எறும்பு தலை குனிந்து சென்றது. ..........................................
  - பட்டுப்பூச்சி வானில் பறந்தது. ..........................................
- எறும்புகள் கேலியாகச் சிரிக்க காரணம் என்ன? எழுதுங்கள்.
- பட்டுப்புழு கூறிய அறிவுரை என்ன? எழுதுங்கள்.
- பாடப்பகுதியிலிருந்து வினா தயாரித்து வினாவிடை போட்டி நடத்துங்கள்.

## பட்டுநூல்

ஆடை ஆபரணங்களில் பெண்களுக்குப் பேராசை தான். வகை வகையான வண்ண வண்ண ஆடைகள் அணிவதில் அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைவார். அதிலும் பட்டுப்புடவை என்றால் கேட்கவே வேண்டாம். பண்டிகை நாட்களிலும் வீட்டில் நடைபெறும் திருமணம் முதலான மங்கல நிகழ்வுகளிலும் பட்டாடை உடுத்துவது தமிழர்கள் பண்பாடு என்றே சொல்லலாம். பளபளப்பான தோற்றம், மிருதுத் தன்மை, கண்கவர் வண்ணங்கள், அழகழகான வடிவமைப்பு இவை எல்லாம் தான் பட்டாடைகள் மேல் கவர்ச்சி ஏற்படக் காரணம். பட்டாடைகள் விலை உயர்ந்தவை. ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் விலையுள்ள பட்டுப்புடவைகளும் உண்டு என்றால் நீங்கள் மூக்கில் விரல் வைத்து விடலாம்.

பஞ்சை நூலாக நூற்று, அதை நெய்து ஆடை தயாரிக்கிறோம். ஆனால் பட்டாடைகள் நூற்கப்பட்ட நூலிலிருந்து நெய்யக் கூடியவை அல்ல. எனவே இதனை 'நூலா நூல்' என்று கூறுவதுண்டு. நூலா நூல் என்றால் நூற்கப்படாத நூல் என்று பொருள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு

முன் பட்டாடையை 'நூலாக் கலிங்கம்' என்று தமிழர்கள் குறிப்பிட்டனர். கலிங்கம் என்றால் ஆடை என்று பொருள். நூலாக் கலிங்கம் என்றால் நூற்கப்படாத நூலால் நெய்யப்பட்ட ஆடை என்று பொருள். நமது முன்னோர்களின் கற்பனைத் திறனைப் பாராட்ட வேண்டும் இல்லையா?

பட்டின் தாயகமாக சீன நாட்டைக் குறிப்பிடுவார்கள். சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் பட்டுப்புடவை தயாரித்ததாகச் சான்றுகள் கூறுகின்றன. உலகில் மிக அதிகமாகப் பட்டு நூல் உற்பத்தி செய்வதும் சீனா தான். இரண்டாவது இடத்தில் நம் நாடு உள்ளது மகிழ்ச்சி தானே! நம் நாட்டிலும் தமிழ்நாட்டிற்குச் சிறப்பு உண்டு. தமிழ்நாட்டில் ஓர் ஊர் காஞ்சிபுரம். காஞ்சிபுரம் என்று சொன்னாலே எவருக்கும் பட்டாடைகள் தான் நினைவுக்கு வரும்.

சீனா, பிரான்சு, இத்தாலி, ஜப்பான், உருசியா, இந்தியா போன்ற நாடுகளில் பட்டுநூல் உற்பத்திச் செய்யப்படுகிறது. இந்தியாவில் இத்தொழில் மிகப்பெரிய ஒரு குடிசைத் தொழிலாக நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பட்டின் வரலாற்றை ஓரளவு தெரிந்து கொண்டீர்கள் அல்லவா! இனி பட்டாடை எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போமே!

பட்டுநூல் ஒருவகைப் புழுக்களில் இருந்து எடுக்கப்படுகிறது. புழுக்களின் தலையில் இருந்து சுரக்கும் உமிழ்நீர் இழைகளாக இருக்கும். அந்த இழைகளையே நூலாகப் பயன்படுத்துகிறோம். இதற்காகப் பலவகைப்





புழுக்கள் இருந்தாலும் கம்பளிப்புழு இனத்தைச் சேர்ந்த 'பாம்பிக்ஸ் மோரி' என்ற புழு வகையையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். ஒரு குறிப்பிட்ட பருவம் அடைந்ததும் புழுக்கள், தங்களிடம் சுரக்கும் நூல் போன்ற உமிழ் நீரால் தங்களைச் சுற்றி ஒரு கூடு அமைக்கும். இந்தக் கூடு ஒரே நூலால் ஆனது. ஒரு கூட்டில் ஐந்நூறு முதல் ஆயிரம் மீட்டர் நீளத்தில் பட்டு இழை (நூல்) இருக்குமாம். கூடு கட்டிய பத்து நாட்களுக்குள் அந்தக் கூட்டிலிருந்து நூலைப் பிரித்து எடுக்க வேண்டும். ஆனால் அது அவ்வளவு எளிதல்ல. நூலை எப்படி எடுப்பது என்று சொல்லக் கேட்டால்

உங்கள் உள்ளம் நோகலாம். ஆனாலும் சொல்கிறேன். கூடு கட்டி உள்ளே இருக்கும் புழுக்களை அப்படியே கூட்டோடு எடுத்துச் சுடுநீரில் சிறிது நேரம் அமுக்கி வைக்கவேண்டும். அந்தக் கூடுகளிலிருந்து நூலைப் பிரித்து எடுக்க வேண்டும். அந்நூலைச் சுத்தப்படுத்தி, வண்ணக் கலவை சேர்த்தபின் பட்டாடைகள் நெய்யப்படுகின்றன. கடைசியாக இன்னொரு செய்தியைச் சொல்லட்டுமா? வருத்தப்படாதீர்கள்!

ஒரு பட்டுப் புடவை தயாரிக்க சுமார் பத்தாயிரம் பட்டுப்புழுக்களைக் கொல்லவேண்டுமாம்!

– கோவிந்தராஜ். அ

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- பொருத்தமான வினாத்தொடர் எழுதுங்கள்.

  எ.கா : கூட்டுப்புழுக்களைக் கொதி நீரில் போடுகின்றனர்.
  கூட்டுப் புழுக்களை எங்கே போடுகின்றனர்?

  - மல்பெரி, தேக்கு, ஓக் இலைகளைக் கம்பளிப் பூச்சி தின்கிறது.

    ..................................................................................................

  - பெண் பூச்சிகள் சுமார் 3000 முட்டைகள் இடுகின்றன.

    ..................................................................................................

  - கூட்டிற்குள் அதிசயம் நிகழ்கிறது.

    ..................................................................................................

- சரியான தொடர் எழுதி வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.
  - பட்டுப்புடவை ........................................................ இருந்தது.
  - வாசந்தி ............................................................... சிரித்தாள்.
  - ஆற்றில் தண்ணீர் .................................................. ஓடியது.
  - சாந்தி கவிதையை ........................................... வாசித்தாள்.
  - மரத்தின் கிளை .............................................. முறிந்தது.

  (கலகலவென, மளமளவென, சடசடவென,
  பளபளவென, சலசலவென)

- நம் நாட்டில் பட்டாடை எங்கெல்லாம் தயாரிக்கப்படுகிறது. தகவல் திரட்டிக் குறிப்பு எழுதுங்கள்.
- பட்டாடையை விற்பனை செய்ய ஒரு விளம்பர வாக்கியம் உருவாக்குங்கள்.



அலகு 8

# நிலமும் நீரும்



மனிதன் உயிர் வாழக் காற்று, நிலம், நீர் போன்றவை இன்றியமையாதவை. இவற்றைச் சுத்தமாகப் பேண வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். கடல் பல்லாயிரம் மனிதர்களுக்கு வாழ்வாதாரமாகத் திகழும் இயற்கையின் கொடையாகும்.

# தென்றல்



## காற்று

உருவம் இல்லாக் காற்றே நீ
உயிர்மூச் செனக்குத் தருகின்றாய்!
வியர்வை சிந்தும் போதெல்லாம்
விரைந்தே துடைக்க வருகின்றாய் !

வாசனை ஏந்தி வருகின்றாய்!
வள்ளலைப் போலத் தருகின்றாய்!
ஓய்வே இல்லாக் காற்றே நீ
ஒலியை வாங்கித் தருகின்றாய்!

ஏற்றத் தாழ்வே இல்லாமல்
எல்லோரிடமும் வருகின்றாய்!
உன்னிடம் உள்ள நல்ல குணம்
ஒவ்வொரு வர்க்கும் வர வேண்டும்!

தென்றல் காற்றே என்னை நீ
தினமும் தொட்டு விளையாடு!
உன்மேல் கோபம் கொள்வேனா?
உயிரைக் காக்கும் தோழன் நீ!

– குழ. கதிரேசன்

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலின் முதல் எழுத்து ஒரே போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்துக் கூறுங்கள். எழுதுங்கள்.
- ஒரே பொருள் தரும் சொற்களை இணையுங்கள்.
  - வாசனை – வேகமாக
  - வள்ளல் – மணம்
  - விரைந்தே – கொடையாளி
- பாடலின் மையக் கருத்தைச் சொல்லுங்கள். எழுதுங்கள்.

## மாற்றம்

கடுமையான கோடைக் காலத்திற்குப்பின் பருவ மழை பெய்யத் தொடங்கியது. நிலமகளின் தாகம் தணிந்தது. காட்டிலும் நாட்டிலும் பசுமை தலை காட்டத் தொடங்கியது. எங்கும் குளிர்ச்சி பரவியது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மக்களின் மகிழ்ச்சியைக் கண்டு கடல் பெருமிதம் கொண்டது. அந்த பெருமிதத்தைப் பேரலைகளால் காட்டின. இதைக்கண்ட காற்றிற்குக் கோபம் எழுந்தது. மழை பெய்வதற்கு நான் தான் காரணம், என்று காற்று தன்னைத்தானே ஆணவம் அடைந்தது. கடலிடம் சண்டைக்குச் சென்றது.



கடலுக்கும் காற்றுக்கும் கடுமையான வாக்குவாதங்கள் நடந்தன. கடல் நீராகிய நான் ஆவியாகி மேலே செல்கிறேன். அந்த ஆவி மேகங்களாகிக் குளிரும் போது மழை நீராகக் கீழே பெய்கிறேன். எனவே நான் தான் மழைக்குக் காரணம் என்றது கடல்.

"வீண்வாதம் செய்யாதே! நான் கடினமாக உழைத்து மேகக் கூட்டங்களை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகர்த்திச் செல்கிறேன். மேகங்களைக் குளிரச் செய்வதும் குளிர் காற்றாகிய நான்தான். வடகிழக்குப்



பருவக்காற்று, தென்மேற்குப் பருவக்காற்று என்றெல்லாம் கேட்டது இல்லையா! எனவே நான் தான் மழைக்குக் காரணம்" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கோபமாகப் பேசியது காற்று. இதையெல்லாம் மேலே இருந்து கவனித்துக் கொண்டிருந்தது சூரியன். இவர்களுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டது. சிறிது காலம் சூரியன் கார்மேகங்களுக்குள் மறைந்து கொண்டது. நாட்டில் வெப்பமும் இல்லை, வெளிச்சமும் இல்லை. கடல் நீர் ஆவியாகவில்லை. காற்றுக்கும் மேகங்களை நகர்த்தும் வேலையில்லை. மழை நின்றது. மீண்டும் பஞ்சமும் பசியும். எங்கும் வறட்சி. கடலும் காற்றும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தன. அந்நேரம் சூரியன் நடுவானில் தோன்றியது.

"ஏய்! கடலே, நீ தான் மழைக்குக் காரணம் என்றாயே! மழை இல்லாமல் மக்கள் வருந்துவதைப் பார்க்கவில்லையா? மழை பெய்யச் செய்யேன்" என்றது சூரியன். கடல் எதுவும் பேசவில்லை. இப்போது பேரலைகள் இல்லை.

அடுத்து, காற்றைப் பார்த்துக் கேட்டது சூரியன்.

"ஏய்! காற்றே! நீதான் மழைக்குக் காரணம் என்று ஊரெல்லாம் அலைந்து திரிந்து பேசினாயே! இப்போது மழை பெய்யச் செய்யேன், நாட்டையும் மக்களையும் காப்பாற்றேன்" என்று கூறியது.

காற்றும் மௌனம் ஆனது. மெல்லியதாகவே வீசியது.

"உண்மையில் நான்தான் கடல் நீரை ஆவி ஆக்குகின்றேன். அந்த நீராவி தானே குளிர்ந்து மழையாகப் பெய்கிறது. அப்படியானால் மழை பெய்ய யார் மூலகாரணம்" என்று கேட்டது சூரியன். காற்றும் கடலும் சூரியனை வணங்கின.

"என்னை வணங்க வேண்டாம்"

சூரியன் மீண்டும் பேசத் தொடங்கியது.

"இயற்கையில் நிகழும் எந்த ஒரு நிகழ்வுக்கும் ஒன்றோ, ஒருவரோ மட்டும் காரணம் அல்ல. கூட்டு முயற்சியால் தான் நல்லவை நடக்கின்றன. கூடி வாழ்வதால் தான் கோடி நன்மை என்று கூறுவதைக் கேட்டிருப்பீர்களே!

கடலும் காற்றும் சூரியனும் மகிழ்ச்சியோடு தங்கள் இயல்பான வேலையில் ஈடுபட்டனர்.

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- காற்று கடலிடம் கூறியது என்ன? எழுதுங்கள்.
- மாதிரி போன்று தொடர் எழுதுங்கள்.

  எ.கா : வளவன் பழம் வாங்கினான்.
  வளவன் பழங்கள் வாங்கினான்.

  - தோட்டத்தில் பூ வாடியது.
    தோட்டத்தில் ................ வாடின.
  - வானத்தில் பறவை பறந்தது.
    வானத்தில் ...................... பறந்தன.
- எதிர்ச் சொல்லை இணையுங்கள்.
  - மகிழ்ச்சி × பெரிது
  - கடினம் × வருத்தம்
  - வெப்பம் × எளிது
  - சிறிது × குளிர்
- காற்றும் கடலும் சண்டையிட்டது சரியா? உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.
- காற்று எவ்வாறெல்லாம் மாசடைகிறது? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.

## காற்றே சூறாவளி

"எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? எறிந்தவன் இருக்கக் கல்லை நோகலாமா? என்றெல்லாம் பழமொழிகள் கேள்விப் பட்டிருக்கிறாயா?" என்று கேட்டார் அப்பா.



"இல்லையே" என்றான் அரவிந்தன்.

"இப்போது சொல்லப் போகிற கதை உனக்கு அந்தப் பழமொழிகளைப் புரிய வைக்கும்" என்று ஆரம்பித்தார் அப்பா.

கடலின் மீது ஒரு கப்பல் சென்று கொண்டிருந்தது. கடல் திடீரென்று கொந்தளித்ததால் அந்தக் கப்பல் உடைந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த ஒருவன் கடலின் அலைகளோடு கடுமையாகப் போராடிக் கரை சேர்ந்தான். களைப்பாலும் பசியாலும் வாடிய அவன் கரையிலேயே விழுந்து உறங்கிவிட்டான்.

உறக்கம் கலைந்து விழித்தபோது கடல் அமைதியாகி இருந்தது. அதன் மீது படகுகள், கப்பல்கள் பயணம் செய்யத் தொடங்கி இருந்தன.

ஆச்சரியப்பட்டு நின்ற அவனை நோக்கிக் கடல். "என் மீது கோபம் கொள்ள வேண்டாம் நண்பனே, இயல்பில் நான் அமைதியானவன். பூமியைப் போல பொறுமையானவன். ஆனால் இந்தக் காற்று இருக்கிறதே அது திடீரென்று என் மீது பாய்ந்து அலைகளை உருவாக்கி என்னைக் கொந்தளிக்கச் செய்து விடுகிறது. ஆகவே நீ காற்றைத் தான் கோபித்துக் கொள்ள வேண்டும்." என்றது.

– சந்திரகாந்தன்

## செயல்பாடுகள்

- சிறுகதையை வாசித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- "சுட்டவன் இருக்க குண்டடை நோகலாமா?" இப்பழமொழிக்கான கருத்துகளைக் கூறுங்கள்.
- முதலெழுத்தை மாற்றி சொற்கள் உருவாக்குங்கள்.
  - அண்டை, ........................., ........................., .........................
  - கரை, ........................., ........................., .........................
  - வாடிய, ........................., ........................., .........................
- நிகழ்வை முழுமையாக்குங்கள்.

  வளவனும் அவனது நண்பன் ராமுவும் பள்ளிவிட்டு நடந்து வந்து கொண்டிருந்தனர். வரும் வழியில் சுவருக்குப் பின்னால் கிளி ஒன்று நடுங்கிக் கொண்டிருப்பதை வளவன் பார்த்தான். அவன் ஓடிச் சென்று ...........

  ...........................................................................................................

  ...........................................................................................................

  ...........................................................................................................

  .... .......................................................................................................



# நிலமகள்



## புதிய பாப்பாபாட்டு

நல்ல உலகமிது பாப்பா!– இன்று
நாச மடைகிறது பாப்பா!
செல்லக் குழந்தை நீ பாப்பா!– இதை
செம்மை படுத்திடடி பாப்பா!

வனங்கள் அழிகிறது பாப்பா! – உயிர்
வாடி மடிகிறது பாப்பா!
இனங்கள் பிழைத்திடவே பாப்பா!–நீ
தினமும் உழைத்திடடி பாப்பா!

நீரும் நிலமும்வான் வெளியும்– நஞ்சு
ஏறித் துடிக்குதடி பாப்பா!
தூய்மை படுத்திக்கொடு பாப்பா!– கொடும்
துயரைத் துடைத்திடடி பாப்பா!

கோடிக் கணக்கில் மக்கள் கூட்டம் – நிதம்
கூடி நெருக்குதடி பாப்பா!
ஓடி விளையாட பாப்பா! – உனக்கு
ஓரிடமும் மிஞ்சாது பாப்பா!

ஒதுங்க இடமுமில்லை பாப்பா!– பலர்க்கு
உடுப்பில்லை உணவில்லை பாப்பா!
ஒடுக்கும் நிலைகளெல்லாம் நீக்கி –நீ
உயிர்கொடு உரம்கொடு பாப்பா!

அழிவுக்குக் காரணம் மாந்தர்– அவர்
ஆசைக்கு அளவில்லை பாப்பா!
இழிந்த சுயநலத்தை நீக்கி – அவரை
இயற்கையோ டியங்கச் செய் பாப்பா!

– பா.தயானந்தன்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- 'து' என்ற எழுத்தில் முடியும் சொற்களை எழுதுங்கள்.
- இரு சொல் ஆக்குங்கள்..
  - நாசமடைகிறது – .............. + ..........................
  - உலகமிது _ .............. + ..........................
  - உணவில்லை _ .............. + ..........................
  - உடுப்பில்லை _ .............. + ..........................
- பாடலின் கருத்தைக் கூறுங்கள். எழுதுங்கள்.
- பாடலை முழுமையாக்குங்கள்.

  நலம் நாடும் உலகமிது பாப்பா !
  அதை நாம் பேணிடுவோம் பாப்பா !
  ................................................................................
  ...................................................................................
  ...................................................................................
  .......................................................................................
- நிலம் மாசுபடாமல் இருக்க உங்களால் என்ன செய்ய இயலும்? குறிப்பு எழுதுங்கள்.

## தாங்கும் நிலம்

வள்ளுவரின் நண்பர் ஒருவர் வள்ளுவரைக் காணவந்தார். அவர் முகம் கோபத்தால் சிவந்து இருந்தது. எரிகின்ற தீயின் வெம்மை அவரது உள்ளத்தில் நிறைந்திருந்தது.

"பக்கத்துக் காட்டுக்காரனின் தொல்லை தாங்க முடியவில்லை" என்றார் நண்பர்.



"என்ன செய்கிறான்?" என்று கேட்டார் வள்ளுவர்.

வயலில் "வரப்பை மாற்றிப் போட்டு விடுகிறான். அவனது ஆடுமாடுகளை விட்டு மேய்த்துப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றான். காட்டிற்குத் தண்ணீர் போகும் வாய்க்காலை உடைத்து விடுகின்றான். வம்புக்கு வருகின்றான். பொறுமைக்கும் ஓர் அளவு உண்டல்லவா? இனியும் என்னால் பொறுக்கமுடியாது. அடிக்குப் பதிலடி கொடுப்பதைப் போல அவன் செய்ததையே திருப்பிச் செய்யப் போகின்றேன்" என்றார் நண்பர். இதைக் கேட்ட வள்ளுவர் புன் முறுவல் பூத்தார். வள்ளுவர் ஒன்றும் பதில் கூறாமல் சிரித்தார். நண்பருக்கு என்னவோ போல இருந்தது. "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார் நண்பர்.

"உங்களிடம் பொறுமை சிறிதும் இல்லையே! அதை நினைத்துத்தான் சிரித்தேன்" என்றார் வள்ளுவர். "என்ன, என்னிடமா பொறுமை இல்லை? இவ்வளவு காலமாக அவன் செய்ததற்கெல்லாம் பேசாமல் இருந்தேனே, இது பொறுமை இல்லையா?" என்று மற்றுமொரு கேள்வியைக் கேட்டார் நண்பர்.

வள்ளுவர் நண்பரை அழைத்துக் கொண்டு வீட்டின் பின்புறம் சென்றார். அங்கு இருவர் குப்பை போடுவதற்காக ஒரு குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். அதைக் காட்டிக்கொண்டு வள்ளுவர் கேள்விகள் கேட்டார். நண்பர் பதில் சொன்னார்.

"அவர்கள் என்ன செய்கிறார்கள்?"

"நிலத்தை வெட்டித் தோண்டுகிறார்கள்"

"வெட்டுவது நிலத்துக்குச் செய்யும் தீமை?"

"ஆமாம்."

"நிலம் அவர்களை அதற்காக, அதே குழிக்குள் தள்ளலாம் அல்லவா?"

"ஆமாம்." "ஆனால் நிலம் என்ன செய்கின்றது?"

'தள்ளுவதற்குப் பதிலாக அவர்களைத் தாங்குகின்றது."

இதுவரை கேள்விகள் கேட்ட வள்ளுவர். "இதுதான் உண்மையில் பொறுமை. தனக்குத் தீங்கு செய்பவர்களையும் தாங்கும் நிலம் போல



இருப்பவனே பொறுமைசாலி."
நண்பர் கேட்டுவிட்டு அமைதியாகச் சென்றார்.
வள்ளுவரோ, நண்பருக்குச் சொன்ன கருத்தைத் திரட்டி,
"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை."
என்ற குறளாக எழுதினார்.

– மா.பா. குருசாமி

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- இணையான சொல்லைக் கதையிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.
  - சினம் – ......................................
  - சிரமம் – ......................................
  - புன்னகை – ......................................
- எதிர்ச் சொல் எழுதுங்கள்.
  - முன்பு x ......................................
  - தீங்கு x ......................................
  - சிரித்தேன் x ......................................
  - நண்பன் x ......................................
- "வள்ளுவர் ஏன் சிரித்தார்?" எழுதுங்கள்.
- நீங்கள் பொறுமையாக நடந்ததுண்டா? உங்கள் அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.

## நேர்மையான உழவன்

போரில் வெற்றிபெற்று நாடு திரும்பிய படைத்தலைவரும் வீரர்களும் களைப்பு அடைந்தனர். தலைநகரை அடைய இன்னும் சில நாட்கள் பயணம் தேவைப்பட்டது. வீரர்கள் பசியுடன் இருப்பதை அறிந்தார் படைத்தளபதி. அங்கு ஒரு முகாம் அமைத்துத் தங்கினர்.

படைத்தளபதி : படைத்தலைவரே! அருகிலுள்ள ஊருக்குச் சென்று நமக்குத் தேவையான உணவுப்பொருட்களைக் கொண்டுவாருங்கள். தேவையான வீரர்களை அழைத்துச் செல்லுங்கள்.

படைத்தலைவர் : அப்படியே ஆகட்டும் தளபதியாரே! (வீரர்களுடன் தலைவனும் புறப்பட்டான். அவர்கள் எதிரில் உழவன் ஒருவன் வந்தான்.)

படைத்தலைவர் : இந்த ஊரிலேயே தோட்டத்துடன் நல்ல விளைநிலம் எங்கே உள்ளது? எங்களுக்குக் காட்டுங்கள்.

உழவன் : ஐயா! இந்தத் தோட்டத்தில் வாழையும் தென்னையும் கரும்பும் நெல்லும் நன்றாக விளைந்துள்ளன.

படைத்தலைவர் : வீரர்களே! வயலுக்குள் இறங்கி உணவுப் பொருட்களைக் கொண்டு வாருங்கள்.

உழவன் : ஐயா! இதைவிட அருமையான வயல் ஒன்று காட்டுகிறேன். எல்லா பழவகைகளும் கரும்பும் நெல்லும் காய்கறிகளும் அங்கே உள்ளன.

படைத்தலைவர் : இதைவிட அருமையான நிலம் இருக்கிறதாம். நாம் அங்கே செல்வோம்.



(உழவனைத் தொடர்ந்து படைத்தலைவனும் வீரர்களும் நடந்தார்கள்).

உழவன் : ஐயா! இதோ இந்த நிலத்தில் உங்கள் விருப்பம் போல் எதை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லுங்கள்.

படைத்தலைவர் : (கோபத்துடன்) உழவனே! எதற்காக எங்களை இவ்வளவு தொலைவு வீணாக அழைத்து வந்தாய்? நீ முதலில் காட்டிய நிலம் இதைவிடச் சிறப்பாக இருந்ததே!

உழவன் : ஐயா! நான் முதலில் காட்டியது வேறு யாருடைய நிலமோ? அந்த நிலத்தில் பொருட்களை எடுத்திருந்தால் அந்த உழவனின் இழப்பிற்கு நான் பொறுப்பாவேன். இது எனக்குச் சொந்தமான நிலம் உங்கள் விருப்பம்போல் பொருட்களை எடுத்துச் செல்லுங்கள்.

(உழவனின் பேச்சு படைத்தலைவனின் உள்ளத்தைத் தொட்டது. உழவனுக்கு இருக்கும் நேர்மையான உள்ளம் தனக்கு இல்லையே என்று வருந்தினான். அதன் பிறகு,)

படைத்தலைவர் : வீரர்களே! இந்த ஊரில் எந்தப் பொருள் எடுத்தாலும் அதற்கு உரிய விலையைக் கொடுத்துவிடுங்கள்.

வீரர்கள் : அப்படியே ஆகட்டும் தலைவரே!

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- அகராதி பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - களைப்பு – ..................................
  - முகாம் – ..................................
  - தொலைவு – ..................................
  - உரிய – ..................................
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - விருப்பம் : ....................................................
  - அருமையான : ....................................................
  - நேர்மையான : ....................................................
  - தென்னை : ....................................................
- உரையாடலைக் கதையாக எழுதுங்கள்.

# நெய்தல்



## கடல்வளம் காத்திடுவோம்..!

கடல் அழகே கடல் அழகே
கருணை காட்டும் கடல் அழகே
கடல் அலையே கடல் அலையே
கண் கவரும் கடல் அலையே...!

உலகப் பரப்பில் மூன்றில்
இரண்டு பங்கு கொள்கிறாய்
எஞ்சிய நீரெல்லாம் ஒன்றாய்
இணைந்திட இடம் தருகிறாய்...!

நண்டு இறால் மீன்களும்
நன்குவாழ இடம் தருகிறாய்
பவளம் முத்து சங்கும்
குறைவு இன்றித் தருகிறாய்..!

காகம் புறா நீர்ப்பறவைகளும்
சீராய் உன்னில் வாழ்கின்றனவே
ஆமை சுறா திமிங்கலங்களும்
அமைதியாய் உன்னில் வாழ்கின்றனவே...!

உந்தன் அலையின் மூலமாய்
உகந்த மின்சாரம் தருகிறாய்
மீனவக் குடும்பங்கள் மீளவே
மறுவாழ்வு தந்து காக்கிறாய்...!

இயற்கைதந்த கொடையான உம்மை
இதமாய் நாங்கள் காத்திடுவோம்
ஜூன் எட்டாம்நாளினை உந்தன்
தினமாக நாங்கள் கொண்டாடிடுவோம்..!

உன்னில் குப்பைக் கழிவுகளைக்
கொட்டாமல் குற்றம்நீக்கி வாழ்ந்திடுவோம்
உன்னில் நஞ்சைக் கலக்காமல்
நாங்கள் உதவிசெய்து காத்திடுவோம்...!

– முனைவர். மு.காமராஜ்

## செயல்பாடுகள்

- பாடலை இராகத்துடன் மெட்டமைத்துப் பாடுங்கள்.
- சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்து புதிய சொல் உருவாக்குங்கள்.

  எ.கா : சதை – சந்தை

  - கதை – ______________
  - மடை – ______________
  - சடை – ______________
- பாடலின் கருத்தைக் கூறுங்கள். எழுதுங்கள்.
- 'கடல் தினம்' பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- நூலகத்திலிருந்து 'கடல்' பற்றிய பாடல்கள் சேகரித்துத் தொகுப்பு உருவாக்குங்கள்.

## கால்வாயும் கடலும்

ஒரு சிறிய கால்வாய் இருந்தது. கடலைப் போய்ப் பார்க்கவேண்டும் என்ற ஆசை அதற்கு நீண்டநாளாக இருந்தது. அந்த ஆசையால், அது ஒருநாள் கடலைப் பார்க்கப் புறப்பட்டுச் சென்றது.

கால்வாயில் கொஞ்சமாகத்தான் தண்ணீர் இருந்தது. ஆகவே கொஞ்சதூரம் சென்றதுமே வற்றிவிட்டது. பிறகு மேலே செல்ல முடியவில்லை.



கொஞ்ச நாள் தங்கியது. முன்பை விட அதிகமாகத் தண்ணீரைச் சேர்த்து, பிறகு கடலை நோக்கிப் புறப்பட்டது. என்றாலும் பாதிவழியிலேயே வற்றிவிட்டது.

மேலும் கொஞ்ச நாட்கள் தங்கி இருந்தது. முன்பு சேர்த்ததைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தண்ணீரைச் சேர்த்தது. ஆசையாகக் கடலை நோக்கிப் புறப்பட்டது. ஆனாலும் இடை வழியிலேயே வற்றி நின்றுவிட்டது. ஆகவே கால்வாய் மிகவும் வாட்டம் அடைந்தது.

அந்தச் சமயத்திலே அதனுடைய அன்பு நண்பனான மழைநீர் அங்குவந்து சேர்ந்தது. நண்பனான கால்வாய் முகவாட்டமாக இருப்பதை, மழைநீர் அறிந்து கொண்டு ஆறுதல் மொழி கூறியது.

மழைநீர் கூறியதைக் கேட்ட கால்வாய் மழைநீரைப் பார்த்து எனக்கு கடலைப் பார்க்கவே முடியாதா? பார்க்கும் வாய்ப்பே கிடைக்காதா?

"கடலைப் போய்ப் பார்ப்பதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது!" "அது என்ன வழி?"

மிகவும் எளிதான வழி. சொல்கிறேன் கேள். நீ ஏதாவது ஒரு பெரிய ஆற்றுடன் போய்ச் சேர்ந்து கொள்ளவேண்டும். பிறகு அந்தப் பெரிய ஆற்றுடன் சேர்ந்து நீயும் புறப்படு. அப்படிச் செய்தால் உனக்கு அதிகச் சிரமம் இருக்காது. புதிய வழியைக் கண்டு பிடிக்கும் தொல்லையும் கால விரயமும் இருக்காது. மிக எளிதாக விரைவிலேயே கடலைப் போய்ப் பார்க்கலாம். கலந்தும் மகிழலாம்"

நண்பன் யோசனையைக் கேட்டுக் கால்வாய் மகிழ்ந்தது. உடனே நடந்து சென்று பெரிய ஓர் ஆற்றில் கலந்து புறப்பட்டது. அதனால் அதிகச் சிரமம் இல்லாமல், அதிவிரைவிலேயே கடலைச் சென்று பார்த்தது. கலந்து மகிழ்ந்தது.

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுங்கள்.

  கிணறு, கேள்வி, கடல், குழந்தை, கோடை
  கீரி, கால்வாய், கூந்தல்
- கால்வாயிடம் மழைநீர் கூறிய ஆறுதல் மொழி என்ன? எழுதுங்கள்.
- கால்வாயும் மழைநீரும் பேசியதை உரையாடலாக எழுதுங்கள்.

## கடலோரத்தில்!

நீங்கள் கடற்கரைக்குப் போயிருக்கிறீர்கள் இல்லையா?

அப்படியானால் வாருங்கள்! நாம் கடற்கரைக்குச் சென்று கொஞ்ச நேரம் உட்கார்ந்து காற்று வாங்கலாமே!

இந்த வெண்மணலைப் பாருங்களேன்! என்ன அழகு! இந்த மணற்பரப்பிலேயே உட்காரலாமா? இதோ பாருங்கள். சதா அசைந்தாடிக் கொண்டிருக்கும் நடனமாடிக் கொண்டிருக்கும் கடல்! கடலின் அந்த ஓரம் ஆகாயத்தைத் தொடுவது போலில்லையா? ஒன்றன்பின் ஒன்றாக அலைகள் உயர்ந்து உயர்ந்து வருவதைப் பாரேன்!

ஹய்யா! அவை கரைக்கு வந்ததும் படீரென்று விழுந்து பரவிச் சிதறுவதைப் பார்! 'குறும்புக்காரக் கடல்' அதற்கு ஒரு நிமிடமாவது சும்மா இருக்க முடிகிறதா பாரேன்! குறும்புக்காரப் பிள்ளைகளைப் போலத்தான்

அலைகளையே பார்த்துக் கொண்டிருந்தால் என்ன மகிழ்ச்சி பாருங்களேன்! ஒரு பெரிய பாயை யாரோ சுருட்டுவதும் விரிப்பதும் போலிருக்கிறது. அதோ கடலின் அந்தக் கோடியில் பாருங்களேன். கடலைத் தொட்டுக் கொண்டிருக்கும் அடிவானத்தைப் பார்! அங்கே என்னென்ன வர்ணஜாலங்கள்! சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை இன்னும் நமக்குச் சொல்லத் தெரியாத நிறங்கள். அதோ! செக்கச் சிவந்த வட்டமான தட்டு ஒன்று மெல்ல மெல்ல கீழிறங்குவதைப் பார்த்தீர்களா? அது என்னவென்று தெரிகிறதா? சூரியன் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பாதி சூரியன் உள்ளே போய்விட்டது. கடல் ஜொலிக்கிறது. இனி



என்ன நடக்கப் போகிறதென்று பார்ப்போம். இன்னும் சூரியன் உள்ளே உள்ளே போய்க் கொண்டிருக்கிறது. வானத்தில் தெரிந்த வர்ணங்களும் மங்கிக் கொண்டே வருகின்றன. இப்போது கடலைப் பார்க்க எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது! தண்ணீர் முழுவதும் தங்க நிறம்.

இதோ பார்! சூரியன் கடலில் மறைந்தே போய்விட்டது. கொஞ்சம் கொஞ்சமாக இருள் படர்கிறது. 'இல்லை' 'இல்லை' சூரியனுக்குப் பதில் புதிதாக ஏதேதோ வானத்தில் தோன்றிவிட்டன.

– ஜெகதா

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- பாடப்பகுதியிலுள்ள வர்ணனைச் சொற்களை எழுதுங்கள்.
- கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுங்கள்.
  - அசைந்தாடி : ...................................
  - தொட்டு : ...................................
  - அழகாக : ...................................
- உங்களுக்குப் பயணம் செய்த அனுபவம் இருக்குமல்லவா? உங்கள் அனுபவத்தை எழுதுங்கள்.
- கடற்கரைகள் பொதுமக்களால் மாசடைகின்றன. அதைத் தவிர்க்க என்ன செய்யலாம் உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.
- "சூரியனுக்குப் பதில் புதிதாக ஏதேதோ வானத்தில் தோன்றிவிட்டன" வானத்தில் என்னென்ன தோன்றியிருக்கும்? எழுதுங்கள்.



# அகரமுதலி

அகலம் – பரப்பு
அகற்றுதல் – நீக்குதல்
அமர்ந்து – உட்கார்ந்து
ஆதங்கம் – கவலை/ துன்பம்
ஆற்றல் – திறமை / வலிமை
இகழ்தல் – கேலி செய்தல்
இடர் – துன்பம் / இடையூறு
இடும்பை – துன்பம் / வறுமை/ நோய்
இயல்பான – சாதாரணமான
இழுக்கம் – தீய நடத்தை / களங்கம்
இனிது – இன்பம்/நன்மை
ஈர் – இரண்டு
ஈனப்பிறவி – இழிந்தப் பிறவி
உபசரி – வரவேற்பு
உரிய – தகுந்த / உகந்த......
உலர்தல் – காய்தல்
உலவி – நடந்து
உவகை – மகிழ்ச்சி / களிப்பு
உழக்கு – முகத்தல் அளவை / இரண்டு ஆழாக்கு
எழில் – அழகு
எளிமை – தெளிவு / சுலபம்
என்பு – உடல்/எலும்பு
ஏழ்மை – தரித்திரம்
ஒடுங்கும் – சக்தி குறையும்
ஒதுங்க – விலக
ஒலித்தது – சத்தம் எழுந்தது
ஒழுகுதல் – நடத்தல்
ஓம்ப – பாதுகாக்க/ போற்ற
ஓலம் – சத்தம்
கடுமையான – தீவிரமான
கடைப்பிடித்தல் – பின்பற்றுதல்
கர்வம் – ஆணவம்/ பெருமை
கவர்ந்து – ஈர்த்து
களை – பயனற்ற செடி
களைப்பு – சோர்வு
காணி – நில அளவு
காலணி – செருப்பு
குழைய – தளர / இணைய
கேலியாக – கிண்டலாக
சக்தி – ஆற்றல் / திறன்
சதா – எப்பொழுதும்
சிரமம் – கஷ்டம்
சிறுமை – கீழ்நிலை
சினம் – கோபம்
சேதம் – அழிவு/ பாதிப்பு
சைகை – பாவனை
தடம் – சுவடு /பாதை
தணிந்த – குறைந்த
துயர் – சோகம்/ துன்பம்
துரிதம் – விரைவு /வேகம்
துவட்டும் – துடைக்கும்
தூய்மை – சுத்தம்
தேற்றுதல் – சமாதானப்படுத்துதல்
தொல்லை – துன்பம் / தொந்தரவு
தொலைவு – தூரம்
நஞ்சு – விஷம்
நலம் – சுகம் / நன்மை
நாசம் – பேரழிவு /சேதம்
நிதம் – தினம் /நித்தம்
நீக்குதல் – அகற்றுதல்
நுட்பம் – நுணுக்கம்
பகுத்துண்டு – பகிர்ந்து சாப்பிட்டு
பங்கிட்டு – பகிர்ந்து
பஞ்சணை – பஞ்சு மெத்தை
பணி – வேலை
பதுங்கி – மறைந்திருந்து
பருத்து – பெருத்து
பருவம் – காலம்
புசிக்க – சாப்பிட
புன்னகை – புன்சிரிப்பு
பூசல் – துன்பம்
பெருத்த – அதிக அளவிலான
பேணு – பராமரித்தல் / பாதுகாத்தல்
பொருத்தமான – சரியான
மகசூல் – விளைச்சல்
மரக்கால் – நான்கு அல்லது எட்டு லிட்டர் கொண்ட அளவு
மாடம் – மாடிப் பகுதி
மிருதுவான – மென்மையான
முகாம் – தற்காலிகமாகத் தங்கியிருக்கும் இடம்
முன்னோர் – மூதாதையர்
முனகல் – புலம்பல் / முணுமுணுத்தல்
மூடன் – அறிவில்லாதவன்
மெல்ல – மெதுவாக
மோப்பம் – முகருதல்
வம்பு – சண்டை / தகராறு
வள்ளல் – உதவுபவர் / கொடுப்பவர்
வளம் – செல்வம் / செழிப்பு
வனம் – காடு
வாசனை – மணம் / சுகந்தம்
வாட்டம் – பொலிவு இழந்த தோற்றம்
விமரிசை – சிறப்பான ஏற்பாடுகளுடன் கூடியது
விருந்தோம்பி – உபசரித்து
விரைந்து – வேகமாக
விழித்து – மயக்கம் தெளிந்து
வெம்மை – வெப்பம்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***